1066
1066

சந்திரோதயம்

ஸ்ரீமதி A. R. சகுந்தலா

1-3-41

உள்நாடு விலை அணா 1.
வெளிநாடு விலை சதம் 8

சந்திரோதயம்

சித்திரை மலர்

“சந்திரோதயம்” சித்திரை மலர், கிளேஸ் கடிதத்தில் டெம்மி 1 x 4 ஸைஸில் விசேஷ அம்ஸங்களுடனும், நெஞ்சை அள்ளும் கட்டுரைகளுடனும், கண்கவர் வனப்புடனும் தயாரிக்கப் பெறுகிறது.

மலரின் விலை

அணா 12

26-4-41 அன்று வெளிவரும்

தேவையுள்ளோர் கிரயத்தை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் 10—3—41-க்குள் அனுப்பிப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இலங்கைப் பகுதியிலுள்ளோர், இலங்கைப் போஸ்டலார்டரும், வெளிநாட்டிலுள்ளோர் பிரிட்டிஷ் போஸ்டலார்டரும் வாங்கியனுப்பலாம்.

ரிஜிஸ்டர் தபால் மூலம் பெற விரும்புவோர் தபாற் செலவின் பொருட்டு 0—4—0 சேர்த்து அனுப்பவேண்டும்.

மானேஜர்,

“சந்திரோதயம்”

60, தம்பு செட்டி தெரு, சென்னை.

சாயா பிக்சர்ஸ்

முதன் முதலாக மகிழ்வுடன் அளிக்கும்
மகோன்னதத் தமிழ் படம்

1 - MAR 194

உத்தமி

பனைமரத்தடியில் உட்கார்ந்து பாலைக்
குடித்தாலும் கள்ளைக் குடித்தானென்றுதானே
நினைப்பார்கள்?
தாஸியின் வீட்டில் உத்தமி யிருந்தாள்
என்றால் நம்பத் தகுந்ததா?

உங்கள் உள்ளத்திற்குகந்த
உயரிய நடிகர்கள் நடிப்பது.

★

கதை:
ஹரிகேசநல்லூர்
எம். லக்ஷ்மணன்.

சங்கீதம்:
பாபநாசம்
ராஜகோபாலய்யர்.

ஆர்கெஸ்ட்ரா: **செல்வமணி.**

★

டைரக்ஷன்: **எஸ். கே. வாசகம்.**

விபரங்களுக்கு:

சாயா பிக்சர்ஸ்,

9, பிருந்தாவன், மைலாப்பூர், மதராஸ்.

இருமலை இன்றே ஒழி!

எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுவது

துரும்பிலேயே கிள்ளி எறிந்தால் இந்தத் துன்பமேன்!
ஆனாலும் பரவாயில்லை.

சி. எம். சாமி **தாளக பஸ்பம்**

இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு, க்ஷயம் முதலிய கொடிய வியாதிகளையும் குணப்படுத்துகிறது. மார்பிலும் தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து, கபத்தை அறவே ஒழித்து சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், கோழை கட்டி கட்டியாய் விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்துகிறது.

புட்டி **1**-க்கு விலை ரூ. **4—0—0.** தபால் சார்ஜ் வேறு.

தலைமைஆபீஸ்: மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S.I.

பிராஞ்சு:—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

GENTS LEVER WRIST WATCHES

Reduced Sale Price Rs. 4-12-0

ரோல்ட்கோல்டு ரிஸ்ட்வாட்சு நெ.52 ரூ. 4—12—0



படத்தில் காண்பதுபோல் மிகவும் அழகான கைக்கெடியாரங்கள் உயர்ந்த ஸ்விஸ் மேக்கர் லீவர் மூமெண்ட் உள்ளது. உறுதியான சாமான்களால் தயார் செய்யப்பட்டது. சரியான மணியைக் காட்டும். இந்த லீவர் கெடியாரம் வாங்கினால் என்றும் ரிப்பேர் கவலையில்லாமல் இருக்கும். பார்வைக்கு அசல் தங்கக் கெடியாரம் போல் கையில் கட்டிக்கொள்வோருக்கு வெகு அழகுள்ளது. இதில் காட்டியபடி எந்த மாதிரி (Round, Square, Rectangular shapes) கெடியாரங்கள் வேண்டுமானாலும் அனுப்பப்படும். குறைந்த விலை ரூ. **4—12—0** 3 வருஷம் கியாரெண்ட். சீக்கிரம் முந்துங்கள். குரோமியம் கேஸ் (Chromium Case) ரிஸ்ட்வாட்சு ரூ. **5—0—0.**

வெஸ்ட்ரன் ஸ்விஸ் வாட்ச் கம்பேனி,
போஸ்ட் பாக்ஸ் நெ. **68,** ஜி. டி. மதராஸ்.

WESTERN SWISS WATCH Co.,
Direct Importers, Post Box No. 68, G. T. MADRAS.

சந்திரோதயம்

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

" தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" — குறள்

ஆசிரியர் ஜி. ஆர். நாதன்

ஆரம். 5	சென்னை 1941ஆம் மார்ச்சீ 1உ	முத்து. 15

பொருளடக்கம்

			பக்கம்
தொண்டிக் கட்சி	...	...	4
தரும பூமி	...	எஸ். ஏ. மருதையன்	9
சாப்பாட்டு ராமு	...	எஸ். பி.	13
சினிமா வம்பு	...	...	...
வருஷப் பிறப்பு	...	ஆர். நடேசன்	...
துக்கடாக் கதை	...	ச. ரா. ஸ்ரீ.	...
ஹோட்டலும் டாக்டரும்	...	"ஸத்யா"	...
மனம்போல் முடிந்தது	...	ரா. சேதுராமன்	17
மரண வாக்குமூலம்	...	"கார்த்திகை"	21
நகை எங்கே?	...	"சாந்தி"	24
பலாபலன்	...	சு. வை.	27
மாஜி மனைவி	...	"ஜல்ஸா"	30

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல

நொண்டிக் கட்சி

சுப்புவும், குப்புவும் சகோதரர்கள். சுப்பு அண்ணன், குப்பு தம்பி. சுப்பு பிறக்கும்போதே இரண்டு காலும் இல்லாத சப்பாணியாக இருந்தான். குப்புவோ சர்வ லக்ஷணத்துடனும் இருந்தான்

இது சுப்புவுக்குப் பிடிக்க வில்லை. 'என்ன சனியன்'! நமக்குக் காலில்லாமல் அவன் நன்ருக நடப்பதை எப்படிப் பார்த்து மனதாரச் சகிப்பேன்?' என்று மனதுள் பொருமுவான்.

தான் நொண்டியாயினும் தன் தம்பியை ஒரு நாளைக்காவது கிண்டல் செய்ய வேண்டுமென்பது சுப்புவின் ஆசை.

ஒருநாள் அவனுடைய வீட்டில் பத்துப்பேர் கூடியிருந்தனர். அப்பொழுது குப்பு ஒய்யாரமாக நடந்து வந்தான்.

பார்த்தான் சுப்பு. முகத்தைக் கோபத்தால் சிவக்க வைத்துக்கொண்டு ''டேய்! குப்பு! உனக்கு வெட்கமில்லை? ஏண்டா நொண்டி நொண்டி நடக்கறே? இத்தனை பேருக்கு முன்னுல் வந்து ஏண்டா மானத்தைக் கெடுக்கிருய்?'' என்று கத்தினுன்.

வந்திருந்த அத்தனை பேரும் சுப்புவின் முட்டாள் தனத்தை எண்ணியெண்ணி வயிறு குலுங்க நகைத்தனர். ஆனுல் சுப்பு, குப்புவை யெண்ணித்தான் எல்லோரும் சிரித்ததாக எண்ணிக் கொண்டான்.

உடனே அவன் மூளை இன்னும் விநோதமாகப் போயிற்று. ''டேய் குப்பு! இதைப்பாருடா! இனிமேலாவது இந்த மாதிரி நடந்து பழகு;'' என்று கூறிக்கொண்டே, தன் பிருஷ்ட பாகத்தால் நகர்ந்து காட்டினுன். வந்திருப்பவர்கள் இம்முறை கர கோஷத்துடன் சிரித்தனர்.

தலையங்கத்தை எழுதுவதை விட்டு, என்ன ஆசிரியர் கதை சொல்ல ஆரம்பித்து விட்டாரே என்று நேயர்கள் கேட்கலாம். உண்மையில் உங்களுக்குக் கதை சொல்லவேண்டு மென்ற எண்ணம் நமக்குக் கிடையவே கிடையாது

பின், சொல்ல வந்தது எதற்காக என்ருல், தற்பொழுது அரசியல் அரங்கத்தில் சுப்புவையும், குப்புவையும் போல் சிலர் இருக்கிருர்கள் என்பதை விளக்குவதற்குத்தான். சுப்புவைப் போன்ற சில கட்சிகள், குப்புவைப்போன்ற ஒரு கட்சியைப் பார்த்து எளனம் செய்வதைப் பார்த்ததும் எமக்கு மேற்படி கதை ஞாபகத்துக்கு வந்து விட்டது.

உங்களுக்கு இன்னும் சந்தேகம் இருந்தால், காங்கிரஸ்தான் குப்பு என்றும், அதை எதிர்க்கும் இதர கட்சிகள் தான் சுப்பு என்றும் தெரிந்து **கொள்**ளுங்கள்!

காங்கிரஸ் மகாசபை, மஹாபலம் பொருந்தியது. பொதுஜன சம்மத முடையது. சர்வ ஜாதி-மதத்தையும் தழுவியது. இதனால் அதற்கு நாட்டில் அமோகமான வெற்றிகளும், புகழ் மாலைகளும் குவிய ஆரம்பிக்கின்றன.

ஆனால் அதை எதிர்க்கும் இதர கட்சிகளோ, நாட்டிற்கு எவ்விதத்தும் பயன் படாதவை; சுயநலம் கொண்டவை. பிறர் வாழக்கண்டு சகியாதவை; வம்பு பேசுவதே அவைகளின் வேலை.

அதிகம் சொல்ல வேண்டு மென்றால், அவைகளை நொண்டியான சப்பு வுக்கு உவமையாகக் கூறிவிடலாம்.

அவனைப் போல்தான் இந்தக் கட்சிகள், பிருஷ்ட பாகத்தால் நகர்ந்து கொண்டு, நன்றாய் நடக்கும் காங்கிரஸையே குறை கூறிக் கொண்டிருக்கின் றன. இவைகள் அறியாமையைக் கண்டு ஜனங்கள் சிரித்தால் "பார்த்தீர்களா! பொது ஜனங்கள் எங்கள் வார்த்தையால் எவ்வளவு சந்தோஷமடைகின்றனர்!" என்று அவைகளே கரகோஷம் செய்து கொள்கின்றன. இப்படிப்பட்ட சாப்பாணிக் கட்சிகள் நம் நாட்டில் மலிந்துபோனதால்தான், சுயராஜ்யம் வரத் தாமதமாகிறது.

கட்டின வீட்டிற்குப் பழுது சொல்வது மிக எளிது. ஆனால் அவர்க ளால் நிச்சயம் வீடு கட்டமுடியாது. எப்பொழுது ஒருவனுக்கு வீடுகட்டத் தெரியாதோ, அப்பொழுது அவனுக்கு வீட்டைப் பார்த்தால் குறையாகத்தான் தோன்றும்.

அதே மாதிரிதான் கையாலாகாத கட்சிகளெல்லாம் (அவைகளுக்குள்ளே கூட ஒரு ஐக்கியம் இல்லை) தனித்தனி முறையில், ஏதோ கூடுமான வரை நாட்டுக்கு உழைத்து வரும் காங்கிரஸின் காரியங்களில் குறைகள் கண்டு கொண்டிருக்கின்றன.

மஞ்சட் காமாலை பிடித்தவனுக்குப் பார்த்தவிடமெல்லாம் மஞ்சளாய்த் தெரிவது போல் இக்கட்சிகளுக்கு காங்கிரஸின் செய்கைகள் குற்றமாகவே படும்போலும்?

பாழூருக்கு நரியே ராஜா என்பதுபோல், வெகு சமீபத்தில், சென்னை யில் நடந்த ஒரு கூட்டத்திற்கு சுயமரியாதைக் கட்சியின் மாபெரும் தலைவ ரான ஸ்ரீ. ஈ. வே. ரா. அவர்கள் தலைமை பூண்டார். இன்னொரு ஓநாய்க் கட்சியின் தலைவரான ஸ்ரீ எம். என். ராய் அவர்கள் கூட்டத்தில் தமது 'சப் பாணி'ப் பேச்சைக் கொட்டி யளந்து வெளுத்து வாங்கினார்.

'காங்கிரஸின் யுத்தக் கொள்கையைப் பொதுஜனங்களெல்லாம் ஆதரிப் பது உண்மையானால், சத்யாக்ரஹத்தை ஏன் பொதுஜன சத்யாக்ரஹமாக ஆக்கக்கூடாது?' என்று கிண்டல் செய்கிறார் எம். என். ராய்.

ஸ்ரீ எம். என். ராய்க்கு நாம் பதில் கூறுகிறோம். காங்கிரஸ், தனிநபர் சத்யாக்ரஹத்தைப் பொதுஜன சத்யாக்ரஹமாக மாற்ற வேறு ஒரு காரணமு மில்லை.

அப்படி மாற்றினால் இந்தியாவில் மீதியிருப்பவர்கள், ஸ்ரீ ஈ. வே. ரா. எம். என். ராய், ஜின்னா முதலியவர்கள்தான்; அப்படி அவர்கள் மட்டும் தனியே நின்று இந்திய ஜனங்களின் ஒற்றுமையைக் கண்டு பொறாமைப் படுவார்களானால், அவர்கள் மனம் கொஞ்சமா வேகும்!

இம்மாதிரி பரிதாபமான நிலையை இப்பொழுதே ஏன் பார்க்க வேண்டும், என்றுதான் இன்னும் பொதுஜன சத்யாக்ரஹம் ஆரம்பமாகவில்லை யென்பதை ராய் அறிவாராக!

நிற்க, காங்கிரஸின் கொள்கையைத்தான் பொது ஜனங்கள் ஆதரிக்க வில்லையென்றே வைத்துக் கொள்வோம். அப்படியானல் இந்த மகா மேதாவி எம். என். ராயுடைய கட்சியை யார் ஆதரிக்கிருர்கள்?

அப்படி ஆதரிப்பது உண்மையானல், ஏன் உடனே தேசத்தை ஒன்று திரட்டி இவர் ஸ்வராஜ்யம் வாங்கக் கூடாது? வாங்கலாம்; இவர்கள் தான் 'சப்பாணி' சுப்பு மாதிரி பிறரைக் குறை கூறுபவர்களாயிற்றே!

உண்மையில் பலமிருப்பவன், வாயேன் அடித்துக் கொண்டிருக்கிருன்? அவன் நடத்தையில்தான் தன் பலத்தை வெளிப்படுத்துவான்.

எம். என். ராய் தன் பேச்சுக் கிடையே "காங்கிரஸுக்கு வெளியே யும் தேசபக்தர்களும், தியாகிகளும் இருக்கின்றனர்" என்று கூறுகிருர்.

காங்கிரஸில் இருப்பவர்கள்தான் தேசபக்தர்கள் என்ற உண்மை ஜனங் களுக்குத் தெரிந்திருக்கிறது. எனவே காங்கிரஸால் பட்டணம் கல்தா கொடுக்கப்பட்ட எம். என். ராயை யாராவது 'இவர் தேசபக்தர் இல்லை; தேசத்துரோகி' என்று சொல்லிவிட்டால் என்ன செய்கிறது?

இந்த பயத்தால்தான், காங்கிரஸுக்கு வெளியேயும் தேசபக்தர்கள் இருக்கிருர்கள் என்று சொல்லி, தன்னையும் தேசபக்தர் என்று பறை சாற்றிக் கொள்கிருர்.

ஒரு புலி, பசுவின் தோலைப் போர்த்துக் கொண்டு, தன்னைப் பசு என்றால் யாராவது நம்ப முடியுமா? அந்த மாதிரி இவர் தன்னை நாலு பேருக்கு முன்னல் 'தேசபக்தர்' என்று சொல்லிக் கொண்டாலே தேசபக்தர் ஆய்விட முடியுமா?

உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது; இருந்தாலும் அதென்னமோ பறக்கத்தான் செய்கிறது.

எம். என். ராயும் இந்த மாதிரிதான் பறந்து, பறந்து காட்டி 'காங்கிரஸ் மோசம், நாங்கள்தான் தியாகிகள்!' என்று சொல்லிக் கொள்கிருர். ஆனல் ஜனங்களுக்கு சுய புத்தியிருப்பதால் இவரைப் போன்றவர்களின் வார்த்தைகள் காற்றிலேதான் பறக்க வேண்டும்.

காங்கிரஸுக்கு நாட்டில் ஆதரவு இல்லையென்று பிதற்றும் இவர் "சட்ட சபைகளைக் கலைத்து இப்பொழுது பொதுத் தேர்தல் நடத்தினல் காங்கிரஸ்தான் ஜயிக்கும்......எனவே அதை எதிர்க்கும் கட்சிகளுக்கு அவ காசம் கொடுக்க வேண்டும்" என்று முன்னுக்குப் பின் முரணுக முணு முணுக்கிருர்.

காங்கிரஸுக்கு பொதுஜன ஆதரவு இல்லையாம். அதனல் பொதுத் தேர்தலில் அது வெற்றி பெறுமாம்! இம்மாதிரி கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரி வாசி யைத் தவிர வேறு யார் கூற முடியும்?

இப்படிக் கூறும் ஒரு கட்சித் தலைவர், மீண்டும் விட்டுக் கொடுக்காம லேயே பேசுவது இன்னும் கேலிக் கூத்தாக இருக்கிறது.

காங்கிரஸை எதிர்க்கும் இதர கட்சிகள் வெற்றிபெற வேண்டுமானல், அவைகளுக்கு சாவகாசம் தர வேண்டுமாம்!

ஏன், இவைகளுக்குத்தான் ஆதரவு இருக்கிறதே, பின்னும் எதற்கு அவ காசம்! ஒரு வேளை, ஏமாந்திருப்பவர்களின் கண்ணிலெல்லாம் சொக்குப் பொடியைத் தூவி அவர்களையெல்லாம் தங்களுக்கு சாதகமாக வோட் போடும் படி செய்வதற்கு அவர்களுக்கு சாவகாசம் வேண்டும் போலிருக்கிறது!

ராயின் திருமூளை இன்னும் கூட ஒரு படி மேலே போக ஆரம்பித்திருக் கிறது. "யுத்தம் இந்தியாவின் எல்லையை நெருங்கக் கூடும், இங்கிலாந்துக்கே

அபாயம் வரலாம்; அத்தகைய சந்தர்ப்பத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள, இந்திய மக்களின் ஆதரவும், நம்பிக்கையுமுள்ள ஒரு கட்சி வேண்டும்'' என்பது ராயின் கூற்று.

வீடு எரிகையில் ஒருவன் அந்த நெருப்பில் பீடி பற்றவைத்தானாம். அந்த மாதிரி இவர் அதிகாரத்தைக் கைப்பற்ற நல்ல சந்தர்ப்பம் கூறுகிறார். இங்கிலாந்துக்கு ஆபத்து வருகையில் அதிகாரத்தைக் கைப் பற்றுவோம், என்று இவர் கூறுவதைப் போல் அரசாங்கத் துரோகமான வார்த்தையை வேறு யாரும் கூற மாட்டார்கள்.

பிரிட்டன் திண்டாட வேண்டி வரும் சமயத்தை உபயோகித்துக் கொண்டு, சுயநலமடைய எண்ணும் இந்த ராய் கோஷ்டியார்கள் 'காங்கிரஸ் தான் பிரிட்டனின் யுத்த லட்சியங்களுக்கு பாதகம் விளைவிக்கிறது' என்று வாய் கூசாமல் பேசுகின்றனர்.

இப்படியெல்லாம் இவர்கள் சொல்வதைப் பார்த்தால் இவர்கள் இருக்கும் இந்த நாட்டில்தான், முன்பு ஹரிச்சந்திரன் போன்ற சத்யகீர்த்திகள் பிறந்தார்களோ என்று சந்தேகிக்கும்படி இருக்கிறது. நிற்க, இம்மாதிரி ராய்க் கட்சிகளும், பேய்க் கட்சிகளும் நம் நாட்டில் வெகு நாட்கள் இருந்து காலம் தள்ள முடியாது.

அதற்கு உதாரணமாக எம். என். ராய், கூட்டத்தில் பேசுகையிலேயே, அவருடைய வார்த்தைகளுக்குத் தக்க சூடான பதில்கள், வந்திருந்தவர்களிடமிருந்து கிடைத்தன. ஆனால் ஒரு வேளை அவர் ஜனங்கள் செய்த ஆர்ப்பாட்டம் தன்னைப் புகழ்வதற்குத்தான் என்று 'சப்பாணி' சுப்புவைப் போல் எண்ணிக் கொண்டாரோ, என்னமோ!

எது எப்படியிருந்தாலும் காங்கிரஸை எதிர்க்கும் எல்லாச் சில்லரை தெய்வங்களும் இனிமேலாவது காலில்லாத 'நொண்டிக் கட்சி'களாயிராமல் சர்வ லக்ஷணங்களும் அமைந்த காங்கிரஸைப் போல் மாறி, தேசத்துக்கு நிஜமாகவே தொண்டு செய்ய முன் வரட்டும்!

டோங்ரேயின்
பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு பிரசித்தி
பெற்ற டானிக்

இதோ புதியசக்தி!

இதற்காக அதிகச் சிலவுமில்லை

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறது

இதில் தாதுவிருத்தியைத் தரக்கூடிய அநேக சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன, இது உடலில் ஒருவித நூதன சக்தியை உண்டாக்கி, நரம்புகளை முறுக்கேற்றி சரீரத்தின் எல்லாப் பாகங்களையும் வலுப்பெறச் செய்கிறது. மேகச்சூடு, குத்து, குடைச்சல், இடுப்புவலி, பலவீனம், ஆயாசம், தாகம், இருதயத்துடிப்பு, தாது நஷ்டம், முதலியவைகளை நீக்கி, இந்திரியத்தை மணிபோல் கட்டி, பலம், மனோற்சாகம் முதலியவைகளையும் உண்டாக்குகிறது,

20 குளிகை விலை ரூ. 2—0—0.

தலைமைஆபீஸ்: **மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.** S.I

பிராஞ்சு:—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

ஒரே ஒரு மாதம் வரை — ஒரு கடிகாரம் ரூ. 3/8



நவீன அமைப்பும், அழகான வடிவும் கொண்ட கை கடியாரம் 5 வருடம் உத்திரவாதம் சரியான காலம் காட்டும். நல்ல குரோமியம் கேஸில் விலை ரூ. 4/8. ரோல்டு கோல்டு 10 வருடம் உத்தரவாதம். 4 ஜூவல் கொண்டது ரூ. 6/8. தபால் பாக்கிங் 10 அணா. 2 கடிகாரம் வாங்கினால் தபால் சார்ஜ் இனாம். 6 கடியாரமாயிருந்தால் ஒரு கை கடியாரம் இனாம். வாங்கும் கடியாரத்தின் நம்பரைக் குறித்து எழுதவும். ஒரு வாரத்தில் சம்மதமில்லாவிடில் பணம் வாபஸ். காட்லாக் இனாம்.

CALCUTTA CLOCK Co., (Sec-153) 15/1, Joymitter St, P. o. Hatkhola, Calcutta.

தருமபூமி

எஸ். ஏ. மருதையன்

அத்தியாயம் 46

ஆவேசம்!

வெளியேற ஓடிய பாலுவையும் சட்டைக்காரியையும், தலைதூரத்திலிருந்து ஓடிவந்த நாலைந்து போலீஸார் நிறுத்தி, கைது செய்து அழைத்துப் போனார்கள். அப்பொழுதே செய்தி சொல்லப்பட்டு மிஸ்டர் கணபதியா பிள்ளை—போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் வந்திருந்து சகலத்தையும் விசாரித்துக் குறித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஏற்பாடு செய்கிறார்.

* * *

கட்டிலில் படுத்திருந்த தர்மலிங்கம் பிள்ளை, சட்டைக்காரி காரணமாய்த் தன் போக்கு எவ்வளவுக்கு மாறிக் கொண்டு வந்தது, என்று எண்ணிப் பார்க்கிறார். அவ்வளவும் கண்மூடித்தனமாய் நடந்துகொண்டதாகப் படுகிறது. சஹிக்க முடியாமல் தலையைப் புரண்டுகிறார். மார்பு வலித்ததால் கைகளால் அழுத்திப் பிடித்தார். ஒரு முறை புரண்டு படுத்தார்.

அடுத்த கணத்தில் தர்மலிங்கம் பிள்ளை, பதஞ்சலி சாஸ்திரி, பாட்டு வாத்தியார், அன்னபூரணி, பார்வதி, கணபதி, சிறுவன், சிறுமி முதலியோர் திமு திமு வென்று உள்ளே வந்தார்கள்.

ராமலிங்கம் பிள்ளை, குழந்தையைப் போல் "மாமா! வாங்க!" என்று சந்தோஷத்தோடு வரவேற்றார். எல்லோரும் கட்டிலைச் சூழ்ந்து நிற்க, தர்மலிங்கம் பிள்ளை, கட்டிலில் உட்கார்ந்து கருணையோடு விசாரித்தார்.

தான் செய்த அபகாரத்தை யெல்லாம் மறந்து தன்மீது அன்பும், கருணையும் கொண்டு தனக்குப் புத்தி சொன்ன தர்மலிங்கம் பிள்ளையின் கபடில்லா மனத்தை எண்ணிக் கொண்ட ராமலிங்கம் தன் செய்கைக்கு வருந்தினார். அப்போது டாக்டர் வந்திருந்து அவரோடு பேச்சுக் கொடுப்பதும், அவர் பேசுவதும் ஆபத்தில் முடியுமென்று எச்சரித்து எல்லோரையும் வெளியே போகும்படி கேட்டுக் கொண்டார்.

எல்லோரும் திரும்பி ஆனந்த பவனம் வந்து சேர்ந்தனர். வழியில் கணபதி ஏனோ பிரிந்து போய்விட்டான்.

ராமலிங்கம் பிள்ளைக்கு, பாட்டு வாத்தியாரும் பார்வதியும் முன்பு புத்தி சொன்னது, அப்போது அருகில் நின்று இடித்துக் கூறுவது போல் படுகிறது. நெஞ்சிலே யாரோ இரு முரடர்கள் சம்மட்டி கொண்டு தாக்குவது போல் பிராணனை உறுத்தும் வலி; அடிக்கடி தன்னை யாரோ துப்பாக்கியால் சுட வருவது போல் தோற்ற மளித்தது. அப்போது சட்டைக் காரியைப் போலவே ஆஸ்பத்திரி சிப்பந்தியாயிருந்த ஒருஆங்கிலோ இந்தியப்பெண், தட்டில் பால், ரொட்டி இவைகளுடன் உள்ளே வந்தாள்.

ராமலிங்கம்பிள்ளை அவளை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டு முகத்தில் தீ பறிக்க ஆவேசத்தோடு இப்படிப் பேசினார்:—"அடி, நாசகாலி! இங்கே எங்கேடி வந்தே? சாகப் போகிற என்னை கேலி செய்யவா வந்தே? மூஞ்சியைப்பாரு மூஞ்சியை! காதல், அன்பு, நேர்மை! எல்லாம் எங்கேடி? எட்டு வருஷ காலமா உன் மனசு கோணாமெ நடந்தேனடி! என்னையா கொல்லச் செய்தே?''

பணிப்பெண் பாலோடு தட்டையும் போட்டுவிட்டு ஓடினாள். ராமலிங்கம் பிள்ளை "கல கல'' வென்று சிரித்தார். அவ்வளவு தான் சுருண்டுபோய்க் கட்டிலில் விழுந்தார். ஆஸ்பத்திரி சிப்பந்திகள் மயிர்க் கூச்செறிந்து போய் அறைக்கு வெளியே நின்று கலவரத்தோடு பார்க்கலானார்கள்.

* * *

ஆனந்த பவனம் வந்த தர்மலிங்கம் பிள்ளை கணபதி, இடையில் போய் விட்டது தெரிந்து "ஏன் கணபதி போய் விட்டான் அன்னபூரணி?'' என்று விசாரித்தார்.

அன்னபூரணி எரிச்சலோடு "போகாமல் என்ன செய்வான்? எந்த முகத்தைக் கொண்டு இங்கே வருவான்?'' என்றாள்.

"ஏன் இங்கே வருகிறது இல்லையோ? உங்களோடெல்லாம் பேசுகிறது இல்லையா!''

"அவன் எங்கே, இங்கே வர்றான். அன்றைக்கு என்னமோ உத்தியோகம்னு வந்தான்; போயிட்டான். இப்போ நீங்க வந்திருக்கிறது தெரிஞ்சு வந்தான் போனான்! இப்போதெல்லாம் இன்ஸ்பெக்டர் துரை பாருங்க; நம்மையெல்லாம் கண்டால் காட்டுமிராண்டியாய்த் தோணறதோ என்னவோ!''

"இப்போ அந்தப் பெண் என்ன ஆனாளாம்?''

"அது பொய்யோ நிசமோ, இந்த ஒரு மாசத்துக்கு முன்னாலே இவன் அவளோடே தான் இருந்தான். நம்ம பாட்டு வாத்தியார் போய் எவ்வளவோ சொல்லியும் கேட்காமெ, அப்புறம் நான் போய் மானம் கெட ரெண்டு பேசிட்டு வந்தேன். அதிலேயிருந்து அந்தப் பெண் அவனிடமில்லை. விசாரிச்சதிலே தன்னுடை சொத்தையெல்லாம் போட்டு அனாதை மடம்னு ஒரு தர்ம சத்திரம் கட்டி, இப்போ தான் திறப்புவிழா நடத்தினாளாம்! எழுந்து வந்தவளுக்கு அத்தனை நல்ல புத்தியாம்.''

அத்தியாயம் 47

தத்தளிப்பு

அன்றைய மோகனமான இரவில், காவேரியாற்றின் கரை மணலில் கணபதி உட்கார்ந்திருந்து "என்ன இது சங்கடமான நிலைமை! யாருக்குன்னு பரிஞ்சு போறது?'' என்கிறான். பின்புறமிருந்து "பார்க்கப்போனா இருவருக்குந்தான் பரிஞ்சு போகணும்!'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறான் —ஆணுடையிலிருந்த வேதவதி!

"வேதம்! இதென்ன துணிச்சல்? ஒரு பெண்ணுக்கு இத்தனை கட்டுப்பாடு மீறிய புத்தி ஆகாது சே சே!'' என்று வெறுப்போடு கூறுகிறான்.

"இது மாத்திரம் தானா? இன்னமும் பாரு!'' என்று கீழே யுட்கார்ந்து ஜேபியிலிருந்த மணிபர்ஸை எடுத்துக் காட்டி 'இதுவும் கூட' என்று புன்

னகை புரிகிருள். மீண்டும் தொடர்ந்து "எல்லாம் பின்ஞடி யோசிக்கலாம்; புறப்படு ஜட்கா ஸ்டாண்டுக்கு! விடி கிறதுக்குள்ளே இடம் மாறணும்!" என்கிருள்.

"உன் அப்பா அம்மா எல்லாம் சாமா னியத்தில் துக்கப்படுவார்களா வேதம்! கொஞ்சம் யோசித்துப் பாரேன்!"

"அதை யெல்லாம் இப்போ யோசிக் காதே! இப்போ, சரி, முடியாது என்று இரண்டி லொன்று சொல்லி விடு; இனி நான் வீட்டுக்குத் திரும்பு கிறதில்லே. வந்தால் உன்னேடு; இல் லேன்ஞ இந்தக் காவேரியோடு!" என்று தீர்க்கமாகச் சொல்கிருள்.

கணபதி பெருமூச்செறிந்து ஆற் றைப் பார்த்துவிட்டு "சரி புறப்படு! ஆகிறது ஆகட்டும்!" என்று சம்மதிக் கிருன்.

* * *

தருமலிங்கம் பிள்ளே காரிலடிபட்டு, பொம்மனல் பதஞ்சலி கிராமம் சேர்ந்த அன்றைய பிற்பகலில் சென்னேயில் பிரசித்தமான ஹோட்டல் ஒன்றில்— மேன்மாடியிலிருந்த வாடகை யறை ஒன்றில் வேதவதி கணபதியை எதிர் பார்த்திருக்கிருள். அப்போது கண பதி உள்ளே வர இருவருக்கும் தொடர்ந்து சம்பாஷணே நடக்கிறது.

"என், 'டாக்டர் சர்டிபிகேட்' கொடுத்தாயா?"

"எல்லாம் கொடுத்தாச்சு; அப்ளி கேஷன் கூட அங்கீகார மாயிடுத்து. இனி காலி யேற்பட்டால் வேலே நிச் சயம்! ஒரு மாசத்திலே சரி செய்வதாக லோகநாயகம் பிள்ளே சொல்லி யிருக் கிருர். வேலே எப்படியும் கிடைத்து விடும். உன் விஷயமாய்த்தான் எனக்கு ரொம்ப பயமாயிருக்கு! பார்க் கிறவா பலமாதிரி தூற்றுவார்க ளேன்னு அச்சமாயிருக்கு! நீயும் ஒரே பிடிவாதமாய் ஒட்டயிருந்தால் தான் சிநேகம்னு சாதிக்கறே! என்ன செய் கிறது?" என்று வருத்தத்தோடு சொல் லிக் கொண்டு உட்கார்ந்தான்.

"நீ ரொம்ப சங்கோஜி! உன்னே யெப்படி போலீஸ் ட்ரெயினிங்கில் பாஸ் பண்ணிஞ? இப்போ நான் உன் ஞேட யிருக்கிறது பத்தி யாருக்கு என்ன தெரியும், இப்படிப் பயப்ப டறே?"

"அதற்குச் சொல்லவில்லே வேதம்! உன் அப்பா, அம்மா கவலேப்படுவார்க ளேன்னு தான்! என் அப்பா, அம்மா அவர்கள் கேட்டாலும் விபரீதமாய் நினேத்துக் கொள்வார்கள். ஆனல் யார் எப்படி நினேக்கிறபடியும் நான் நடக்கமாட்டேன். அது பற்றி எனக்கு நானே நம்பிக்கையோடு தான் இருந்து வறேன்!"

கணபதி இம்மாதிரி சொல்ல வேத வதிக்குச் சுருக்கென்று தைத்தது. அர்த்தமில்லாத கோபம் வந்தது. அகன் அறிகுறியாய் ஒரு பெருமூச்செறிந்தவ ளாய், மலேத்துப்போய் உட்கார்ந்திருந் தாள். வெகு நேரம் வரை இருவரும் பேசவில்லே.

பின் வேதவதி பேச ஆரம்பித்தாள்: "வாடகைக்கு வீடு பார்த்தாயிற்ரு?" என்ருள்.

"ஊம்!"

"அப்புறம் நாளேக்கு ஜாகை வைத் துக் கொள்ளவா?"

கணபதி "ஊம்.....?" என்று தலே குனிந்தான். அவன் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது. "வேதவதியை வெறுத்தால், அவள் மனம் மங்கி மடியநேரும்! என்னே நினேந்து ஒருபெண் தன் வாழ்க்கையை சோக நாடகமாய் ஆக்கிக் கொள்வதை நான் பார்த்துச் சகிக்கவா? இருக்கட்

டும் இன்னம் சிலகாலம்! அவள் மனதை மாற்றிவிடாதவரை என்னுடைய நல்ல காரியம் தான் எவைவயிருக்கிறது?" என்று பலத்த போராட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு மௌனம் சாதிக்கிறான்.

* * *

இதன் பிறகு பார்வதிக்கும் அன்னபூரணிக்கும் செய்தி எட்டியபிறகு அவர்கள் வெறுப்பை யேற்படுத்திக் கொள்கிறார்கள். பாட்டு வாத்தியார் வேதவதியை சந்தித்து புத்தி புகட்ட இவர்கள் இருப்பிடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார். நாட்கள் சென்று கொண்டிருக்கிறது. தர்மலிங்கம் பிள்ளையும் பதஞ்சலி சாஸ்திரியும் சுற்றுப் பிரயாணத்திற்குக் கிளம்பிய பிறகு ஒரு நாள் பாட்டு வாத்தியார் கணபதியைச் சந்தித்து "கணபதி! என்னப்பா இப்படி எல்லோரும் வருத்தப்படறாப்பலே நடந்துட்டே?" என்று கேட்கிறார்.

கணபதி தீர்க்கமாக அவருக்கு "ஸார்! நீங்கள் இதைப் பற்றி வருத்தப்பட்டாலும் சந்தோஷப் பட்டாலும் எனக்கு அதைப்பத்தி அக்கரையில்லை. இந்த விஷயமாய் என்னிடம் ஒன்றும் சொல்லாதீர்கள். நானும் இதைப்பத்தி ஒன்றும் சொல்லப் போவதில்லை" என்றான் கணபதி.

பாட்டு வாத்தியார் மீண்டும் அவனுக்குப் புத்தி சொல்வதை விட்டு வேதவதியைச் சந்தித்து நீண்ட நேரம் நல்லுபதேசம் செய்தார்.

அதன் பின் வேதவதி ஏதோ ஓர் தீர்மானத்திற்கு வந்தவள்போல் தென்பட்டாள். பாட்டு வாத்தியாருடன் தன் ஊருக்குப் புறப்பட்டு வந்து விடுவதாகச் சொல்கிறாள்.

ஆனால் மறுதினம் புறப்படுகையில், எதையோ எண்ணிக் கொண்டு "ஊரை நினைத்தாலே உடம்பு நடுங்குகிறதே! நான் போக முடியாது" என்று முணுமுணுத்தவாறு பிரயாணத்தை நிறுத்தினாள்.

(தொடரும்)

ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்
12,58,400 ஜனங்கள் போற்றுவது
ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரிகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும் குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. 2.

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (c)
வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

பாப்பாப் பகுதி :

சாப்பாட்டு ராமு

எஸ். பி.

சாப்பாட்டு ராமுவுக்கு வயது இருபதுக்குக் குறையாமல் இருக்கும். அவன் ஒண்ணும் நம்பர் சோம்பேறி யென்பது உலகம் அறிந்த விஷயம். அவன் சதா தூங்கிக் கொண்டேயிருப்பான். அவனுடைய அண்ணன் கிட்டுதான் வெளியே வியர்வை சொட்ட வேலை செய்து, பணம் சம்பாதித்துக்கொண்டு வருவான். அதனால் ராமுவைக் கண்டால் அவனுடைய அண்ணன் மனைவிக்குப் பிடிக்காது.



ஒரு நாள் திண்ணையில் தூங்கிக் கொண்டே யிருக்கும் போது, அவனுடைய அண்ணி ஒரு குச்சியால் அவனை அடித்து விட்டாள். "இப்படித் தூங்கிக் கொண்டேயிருந்தால் யாருக்குத்தான் சகிக்கும்? இந்தா, இப்போ இந்த அண்டாவை யெடுத்துக் கொண்டு குளத்துக்குப் போய் ஜலம் கொண்டுவா. இந்தக் கோடரியை எடுத்துக் கொண்டு, காட்டுக்குப்போய் மூன்று கட்டு விறகு கொண்டுவா. அதுக்கப்புறம்தான் உனக்குப் பிண்டம் கொட்டமுடியும்" என்று தன் ஆத்திரம் தீர வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள். அண்டை வீட்டுக்காரர்கள் ராமுவைப் பார்த்து இளிக்க வாரம்பிக்கவே, அவனுக்குக் கோபம் பிரமாதமாக வந்து விட்டது. அண்டாவைத் தலையில் வைத்துக் கொண்டான். கோடரியைத் தோளில் மாட்டிக்கொண்டான். குளத்தங்கரை வந்து சேர்ந்தான். 'ஜிலு ஜிலு' வென்று காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. மூன்று தடவை கொட்டாவி விட்டான். ராமுவுக்குத் தெரியாமல் தூக்கம் வந்து விட்டது. அங்கேயிருந்த ஒரு பெஞ்சியின் மேல் காலை நீட்டிக் குறட்டை விட ஆரம்பித்தான்.

மூன்று மணி நேரம் தூங்கி விட்டு எழுந்திருந்தான். "ஐயையோ, விறகையும் ஜலத்தையும் கொண்டு போவதற்குள் இருட்டிவிடுமே. இந்த கிரஹசாரத்துக்கு என்ன செய்து தொலைக்கிறது?" என்று யோசித்துக் கொண்டான்.

"சோம்பேறி ராமு!" என்று யாரோ கூப்பிடவே, சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் கண்ணில் தென்பட வில்லை. மறு படியும் தன் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிட்டார்கள் கண்ணைத் துடைத்துக் கொண்டு கீழே பார்த்தான். ஒரு பெரிய தவளை ரண காயத்துடன் படுத்துக் கொண்டிருந்தது "ஏ, மண்டூகமே! நீ கூடவா என்னை 'சோம்பேறி ராமு' என்று கூப்பிடுகிறாய். உன் பாட்டனு நேக்குப் பேர் வச்சான். உன்னை நசுக்கிப் பிட்டு மறு காரியம் பார்க்கிறேன்!" என்றான் ராமு.

"ராமு, கோபிச்சுக்காதே. நீ எனக்கு இப்போ உதவி சேஞ்சேன்னு, நானும் உனக்கு ஒரு பேருபகாரம் செய்வேன்" என்றது தவளை.

ராமுவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "நீ எனக்கு என்ன செய்து கிழச்சுடப் போறே?" என்று ஏளனம் செய்தான்.

"ராமு, நான்தான் தவளைக்கெல்லாம் ராஜா. நான் இன்று காலை ரஸ்தா வரையிலும் போனேன். ஒரு கட்டை வண்டி என்மேல் ஏறிவிட்டது. என்னால் இந்தக் குளத்துக் குள் போக முடியவில்லை. குளத்துக்குள் நீ என்னை எடுத்துப் போட்டு விட்டால், எங்கள் டாக்டர் எனக்கு சிகித்சை செய்து விடுவார். இல்லாவிடில் நான் இங்கே இறக்க வேண்டியதுதான்!" என்று தவளை சொல்லிற்று.

"நீ அதற்குப் பதிலாக எனக்கு என்ன செய்யமுடியும்?" என்று கேட்டான் ராமு.

"உனக்கு என்ன விருப்ப மிருந்தாலும் என்னை நினைத்துக் கொள். நான் அதை நிறைவேற்றுகிறேன்" என்றது தவளை.

ராமு தவளையைக் குளத்தில் கொண்டு விட்டான். "இந்த அண்டா, ஜலத்துடன் என் வீட்டுக்குப் போக வேண்டும்!" என்று நினைத்தான்.

அப்படியே அண்டாவும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தது.

ராமு காட்டுக்குப் போனான். "இந்தக் கோடாரி தானாகவே விறகு வெட்ட வேண்டும்" என்றான். அப்படியே விறகுக் கட்டும் தயாராய் விட்டது. ராமு ஒரு கட்டை வண்டி பக்கத்திலிருப்

பதைப் பார்த்தான், அதில் விறகை வைத்தான். தானும் அதில் படுத்துக் கொண்டான். "மாடு இல்லாவிட்டாலும், இந்த வண்டி என் வீட்டுக்குப் போக வேண்டும்" என்ருன்.

அப்படியே வண்டி நாற்பது மைல் வேகத்தில், நகரத்திற் குள் போகவே, நகர வாசிகள் மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டார்கள். "என்னடா ஆச்சரியமிது! மாடில்லாத வண்டி பக்ஷியைப் போல் பறக்கிறது!" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

ராமு 'ஹாயா'கப் படுத்துக் கொண்டிருந்தான். போலீஸ் காரன் வண்டியை நிறுத்தக் கையைத் தூக்கினன். அவனை ராமு லக்ஷியம் செய்யவில்லை. அந்த தேசத்து ராஜா ரதத்தில் தன் பெண்ணுடன் வந்து கொண்டிருந்தான். ராஜா எதிரே வந் தால் எல்லா வண்டிகளும் நிற்க வேண்டு மல்லவா? ராமு தன் வண்டியை நிறுத்தவில்லை. ரதத்தின் பக்கம் வந்தவுடன், "ஏ, குட்டி என்னைக் கல்யாணம் பண்ணிக்கிருயா?" என்று ராஜ குமாரியைக் கேட்டான்.

அவ்வளவுதான். ராஜாவின் கண்களிலிருந்து கோபப் பொறி பறந்தது. "அந்தப் பயலை இப்போதே என்னிடம் கொண்டு வரவேண்டியது!" என்று தன் சேனுதிபதிக்குக் கட்டளையிட் டான்.

சிப்பாய்களும், ராமு தன் வீடு சேர்ந்தவுடன், அவனை வண்டியுடன் பிடித்து வந்தார்கள். ஆனல் ராமு வண்டியில் படுத்த படியே இருந்தான். ராஜாவைக் கண்டும் எழுந்திருக்க வில்லை. ராஜா அவன் மேல் சீறி விழுந்தான். "ஓஹோ, என் பெண்ணு உனக்கு வேண்டும்?" என்று பரிகாசமாகக் கேட் டான்.

"ஏன் உன் பெண்ணையே கேளேன், அவளுக்கு என்னைக் கண்டால் பிடிக்கிறதா இல்லையா, யென்று! அவளைக் கூப்பிடு" என்ருன்.

ராஜாவும் தன் பெண்ணை வரவழைத்தான். "குழந்தாய்! உனக்கு இவனைக் கண்டால் பிடிக்கிறதா?" என்று ராஜா அவளைக் கேட்டான்.

அவளும் ராமுவைப் பார்த்துப் பிடிக்கிறது என்று தலையை ஆட்டவே, ராஜாவுக்கு ஆத்திரம் வந்தது. "என் பெண்ணையும் இந்தப் போக்கிரியையும் ஒரு படகில் ஏற்றி நடுநதியில் விட்டு விடுங்கள்!" என்று உத்திரவிட்டான்.

அப்படியே ராஜகுமாரியும் ராமும் ஒரு படகில் நடு ஆற்றில் விடப்பட்டார்கள். மூன்று நாள் வரை படகு மிதந்து கொண்டே போயிற்று. ராமு சுகமாகத் தூங்கிவிட்டு எழுந்திருந்தான். ராஜகுமாரி தனக்குப் பசிக்கிறது என்று சொல்லவே, அப்போது தான் ராமுவுக்கு, தவளை தனக்குக் கொடுத்த வரன் ஞாபகம் வந்தது. ஒரு விருந்து வேண்டுமென்று விரும்பினான்.

இருவரும் நன்றாகச் சாப்பிட்டார்கள். படகை நிறுத்திக் கரைக்கு வந்தான். "இங்கே ஒரு மாளிகையும் முப்பது சேவகர்களும் வேண்டும்" என்று விரும்பினான். அப்படியே ஒரு அழகான மாளிகை தோன்றிற்று. ராஜகுமாரியும் சோம்பேறி ராமுவும் அந்த மாளிகையில் சௌக்கியமாக வாழ்ந்து வந்தனர். கிழட்டு ராஜா இறந்த பிறகு, தன் மனைவியை அழைத்துக் கொண்டு, அரண்மனைக்குச் சென்று ஜனங்கள் சம்மதத்துடன் சிம்மாசனமேறினான் சாப்பாட்டு ராமு.

"Wanted Candidates

to learn Homoeopathy, Biochemistry & Matteism. Excellent Postal tution. Books supplied free. Fees Rs. 40/-. Six months course. Diplomas awarded. Apply with four annas stamps for full details to

The Ragland's Eastern Medical College,

THENI S. I. R."

சினிமா வம்பு

"கேமிரா"

சென்னை ஸ்வாமி பிக்சர்ஸார் கூடிய விரைவில் "வள்ளி ஜனனம்" என்ற தமிழ் புராணப் படமொன்றைப் பிடிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். இப் படம் கோவை பிரிமியர் சினிடோனில் தயாரிக்கப்படும். இப்படத்தின் முதலாளி ஸ்ரீ நாராயணசாமி அய்யர் வரும் மார்ச்சு முதலிலேயே படப் பிடிப்பை ஆரம்பிக்கும் பொருட்டு நடிகர் தேர்தலை துரிதமாக செய்து வருகிறார். இதில் எண்ணபாடம் இளம் சங்கீத வித்வான் ஸ்ரீ ராமச்சந்திரன் கதா நாயகனாகவும் ஸ்ரீமதி. குமாரி வரலக்ஷிமி கதா நாயகியாகவும் நடிப்பாரெனத் தெரிகிறது. இதற்கு கேபரியேல் ஆர்ச்செஸ்ட்ராவின் பின்னணி சங்கீதமாம். பார்ப்போம் நடிகர் தேர்தலில் மறுபடி பாஸ் செய்யும் நடிகர்களையும்.

* * *

சேலத்தில் புதிதாக "பவானி பிலிம்ஸ் லிமிடெட்" என்ற படக் கம்பெனியை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவர்கள் ஒரு தமிழ் புராணப் படமொன்றைத் தயாரிக்கப் போவதாகவும், இதில் சிந்தாமணி புகழ் கே. அரங்கநாயகி கதாநாயகியாகவும் நடிப்பாரெனத் தெரிகிறது.

* * *

மைசூர் கோல்டன் முருகர் பிலிம்ஸாரின் "மாயா ஜீவன்" தமிழ் படத்தின் ஒத்திகைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவாம். இப்படத்தை டைரக்டர் ஸ்ரீ சுந்தரம் டைரக்ட் செய்கிறார். இப் படத்தை சிறந்த படமாகக் கொண்டுவர முயற்சிகள் செய்து வருகிறதாகத் தெரிகிறது.

பிரபாத் சந்த் ஞானேஷ்வரில் நடித்த ஸ்ரீமதி சுமதிகுப்தே தற்காலம் புனா பேமஸ் அருண் ஸ்டுடியோவில் தயாரித்து வரும் தொர்டாஞ்ஜி கமலா என்ற மாராத்தி படத்தில் நடித்து வருவதாகத் தெரிகிறது.

* * *

சென்ற இதழில் பிரபல பம்பாய் ஸினிமா நடிகை வஹிதான் காலமான செய்தியைப் பிரசுரித்திருந்தோம். சில பத்திரிகைகளில் அம்மாதிரி பிரசுர

சியாமளாவின் சீதா ஜனனத்தில் நந்தாராம்.

மானதிலிருந்து ஆதாரமாகக் கொண்டு நாமும் பிரசுரித்தோம். ஆனால் ஸ்ரீமதி வஹிதான் காலமாகவில்லையென மேற்படி பத்திரிகைகள் மூலம் வெளியிட்டதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். ஸ்ரீமதி வஹிதான் கொஞ்ச காலம் நோய்வாய்ப் பட்டிருந்து தமது

சொந்த ஊருக்குச் சென்று சௌக்ய மாயிருப்பதாகவும் தெரிகிறது.

* * *

சிருகளத்தூர் சாமாவுடன் சேர்ந்து "ஷைலக்" தமிழ்ப் படத்தை டைரக்ட் செய்த கும்பகோணம் சினிமா ஸ்ரீ ராமு அவர்களின் தகப்பனார் ஸ்ரீ டி. எஸ். சுப்பிரமணிய அய்யர் காலமான செய்தியைக் கேட்டு வருந்துகிறோம். ஸ்ரீமான் அய்யர் அவர்கள் கும்பகோணத்தில் பிரபல வக்கீலாகவும், கொஞ்சகாலம் சர்க்கார் வக்கீலாகவும், முனிசிபல் அங்கத்தினராகவும் இருந்து வந்ததாகவும் தெரிகிறது. ஸ்ரீ ராமுவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

பிரபல சினிமா நடிகை ஸ்ரீமதி கண்ணன்பாலா நியூ தியேட்டர்ஸ் ஸ்டுடியோவிற்குப் போகும் பொழுது அவருடைய காரும் வேறொரு காரும் மோதுண்டு இதனால் அவருக்கு சொற்ப காயங்களேற்பட்டதாகவும் தெரிகிறது. சிறிது காலத்தில் நன்றாக குணமடைந்து விடுவாரெனவும் தெரிகிறது.

* * *

குமார், சிவாஜி, மாடர்ன் தியேட்டர்ஸார் கூட்டுத் தயாரிப்பின் "தர்ம வீரன்" என்ற தமிழ் ஸ்டண்ட் படம் கூடிய சீக்கிரம் வெளி வருமெனத் தெரிகிறது. இப் படத்தை ஸ்ரீ பி. சம்பத் குமார் டைரக்ட் செய்திருக்கிறார். இதில் பி. யூ. சின்னப்பா, கே. கே. பெருமாள், வி. எஸ். டி. சிங், ஸ்ரீமதி எம். ஏ. ராஜாமணி முதலியவர்கள் நடிக்கிறார்கள். இப் படத்தின் கதை, நடிப்பு, காக்ஷிகள், சங்கீதம் முதலியவைகள் முதல்தரமாக இருக்கின்றனவாம்.

சென்னை சியாமளா பிக்சர்ஸாரின் "வேதிவதி அல்லது சீதா ஜனனம்" என்ற தமிழ் படம் இம்மாதம் 23௳ தென்னாட்டில் முக்கிய ஊர்களில் வெளி வருமெனத் தெரிகிறது. இப் படத்தை ஸ்ரீ ரகுநாத் டைரக்ட் செய்திருக்கிறார். இதில் ஸ்ரீ ஆர். பால சுப்பிரமண்யம், ஸ்ரீமதி. கோலார் ராஜம், கே. தவமணிதேவி, குமாரி ருக்மணி முதலியவர்கள் நடித்திருக்கின்றனர்.

* * *

சென்னை அமிஞ்சிக்கரை ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸார் சென்ற வாரத்திலிருந்து, தங்கள் கிளை ஆபீஸ் ஒன்றை மதுரையில் ஒய். எம். வி. ஏ. கட்டிடத்தில் ஆரம்பித்திருக்கிறதாகத் தெரிகிறது.

* * *

கோவை, ஜுவல் பிக்சர்ஸார் தயாரிக்கும் தமிழ் "வேணுகானம்" படப் பிடிப்பு முடிவடையும் தருவாயிலிருக்கிறதாம். இதை ஸ்ரீ முருகதாஸர் டைரக்ட் செய்கிறாரும். இதில் வி. வி. சடகோபன், ஸ்ரீ எம். சே. சாமி, ஸ்ரீமதி வஸந்த கோகிலம் முதலியோர்கள் நடித்திருக்கிறார்களாம்.

* * *

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸாரின் "பக்த கௌரி" எடிட்டிங் நடந்து கொண்டிருப்பதாக தெரிகிறது. இதில் காளி என். ரத்தினம், ஸ்ரீமதி யூ. ஆர். ஜீவரத்தினம், பி. ஏ. ராஜாமணி, பி. எஸ். சிவபாக்கியம் முதலியோர் நடித்திருக்கிறார்களாம். இதை எஸ். நொட்டானி டைரக்ட் செய்துள்ளாராம். அனேகமாக இப் படம் இம்மாத கடைசியில் தென்னாட்டில் முக்ய இடங்களில் வெளியிடப் போவதாகவும் தெரிகிறது.

சென்னை நாராயணன் சம்பெனியார் "சாயா" என்ற தமிழ்ப் புராணக் கதையை தயார் செய்யப் போவதாகத் தெரிகிறது. இதில் கே. தவமணி தேவி முக்ய பாத்ரமேற்று நடிக்கப் போவதாகவும் தெரிகிறது.

* * *

சென்னையில் புதிதாக ஆரம்பித்துள்ள குமார் பிக்சர்ஸார் "காதம்பரி" என்ற படம் ஒன்றை தயாரிக்கப் போவதாகவும் இதை ஸ்ரீ எம். எல். டாண்டன் தென்னாட்டு ஸ்டுடியோ ஒன்றில் டைரக்ட் செய்வாரெனவும் தெரிகிறது.

* * *

கிருஷ்ணா பிக்சர்ஸார் "கஜேந்திர மோக்ஷம்" என்ற தமிழ் புராணக் கதையை படமெடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இதில் பிரபல சினிமா நடிகர்கள் நடிக்கப் போவதாகவும் இதை டைரக்டர் ஸ்ரீ எல். எஸ். ராமச்சந்திரன் டைரக்ட் செய்வாரெனவும் தெரிகிறது.

* * *

சில காலம் ஓய்வு பெற்றிருந்த கல்கத்தா காளி பிலிம்ஸ் ஸ்டுடியோ அநேக பிரமுகர்களின் மேல் பார்வையில் சிறந்த முறையில் மீண்டும் வேலையைத் துவக்கப் போவதாகத் தெரிகிறது. இவர்கள் முதலில் சிறந்த புராணக் கதையொன்றை தயாரிக்கப் போகிறார்களாம். கூடிய சீக்கிரத்தில் வேலை ஆரம்பமாகலா மெனவும் தெரிகிறது.

பிரபல சினிமா டைரக்டர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம் அவர்கள் கூடிய சீக்கிரம் "சம்சார சாகரம்" என்ற கதையின் படப் பிடிப்பை ஆரம்பிக்கப் போவதாக கேள்விப் படுகிறோம்.

* * *

காசி மகாராஜா பிக்சர்ஸார் தயாரிக்கும் "தயாளன்" என்ற கதை படப் பிடிப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகள் கெடுபிடியாக சேலத்தில் நடக்கிறதாம். இதில் பி. யூ. சின்னப்பா, மாஸ்டர் மகாலிங்கம், கொக்கோ முதலியவர்கள் நடிப்பார்களாம். ஸ்ரீமதி கே. எல். வி. வஸந்தா இதில் நடிக்கப் போவது இன்னும் ஸ்திரமாகவில்லை எனவும் தெரிகிறது.

* * *

சென்னையில் சாயா பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை புதிதாக ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் முதன் முதலில் "உத்தமி" என்ற தமிழ் படத்தை தயார் செய்யப் போகிறார்களாம். இதற்கு ஹரிகேச நல்லூர் ஸ்ரீ எம். லக்ஷ்மணன் கதை, வசனம் எழுதியிருக்கிறாராம், பாபநாசம், ராஜகோபாலய்யர் சங்கீதமாம். செல்வமணி ஆர்ச்செஸ்ட்ரா. இப் படத்தை ஸ்ரீ எஸ். கே. வாசகம் டைரக்ட் செய்வாரெனத் தெரிகிறது. இதன் காரியாலயம் சென்னை மைலாப்பூர் நெ. 9, பிருந்தாவன் என்ற இடத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது.

துக்கடாக் கதை

ச. ரா. ஸ்ரீ.

மண் கோட்டை லைப் இன்ஷியூரன்ஸ் ஏஜண்டு மிஸ்டர் கரூர் கணபதி அய்யர், ஏஜண்ட் ஆன இரண்டு மாதங்களில் 12 நபர்களுடைய ஆயுளை இன்ஷியூர் செய்து விட்டார். 13 வது நபரைத் தேடிக் கொண்டிருக்கும் பொழுது அய்யர் அவர்களுக்கு இன்ஷியூரன்ஸ் தலைமை ஆபீஸிலிருந்து ஒரு எச்சரிக்கைக் கடிதம் வந்தது. அதில்,

"ஐயா!

உம்மால் இன்ஷியூர் செய்யப்பட்ட பன்னிரண்டு நபர்களில் நான்கு பேர், ஆயுளை இன்ஷியூர் செய்த 3 மாதங்களுக்குள்ளாகவே பரலோகம் அடைந்து விட்டார்கள். இப்படி அல்ப ஆயுசு உடையவர்களையும் வியாதி பீடிக்கும்படி பல ஹீனமுள்ளவர்களையும் நீர் இன்ஷியூர் செய்து கொண்டே போனால் நம் கம்பெனியின் கதி அதோ கதிதான். இனிமேலாவது வைத்தியப் பரீக்ஷையில் அதிகக் கவனம் செலுத்தும்படி உம்மிடம் கோரப்படுகிறது" என்று எழுதியிருந்தது.

அதனால் தான் அய்யர், பதின்மூன்றாவது நபரை வெகு ஜாக்கிரதையாகத் தேடலானார்.

அவ்வூர் செட்டியார் ஒருவர் அய்யரை வீட்டிற்கு வரவழைத்து தன் மகனின் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டினார். அய்யர் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று தனக்குத் தானே எச்சரித்துக் கொண்டு "ஆஹா! நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும் வயது.?" "24 "—"படிப்பு"—"எம். ஏ. எம். எஸ். ஸி. எல். டி." "உத்தியோகம்"—"சினிமாவில் டைரக்டர்" 'சம்பளம்'—"மாதம் 600 ரூபாய்" 'கெட்ட பழக்கம் உண்டா?'—"உதாரணத்திற்குக் கூட இல்லை." "எப்பொழுதாவது வியாதி பீடிக்கப் பட்டு இருக்கிறதா" சமீபத்தில் இல்லை.

"செட்டியார்! தயவு செய்து மன்னிக்கணும். என் கம்பெனி உங்கள் மகனின் ஆயுளை இன்ஷியூர் செய்யாது."

"ஏனையா? என்ன சமாச்சாரம்?'

"ஏனா? இதோ பார்த்தீரா ஹெட் ஆபீஸிலிருந்துவந்த கடுதாசி. அல்பாயுஸ்காரர்களையும், வியாதி பீடிக்கக் கூடியவர்களையும், இன்ஷியூர் செய்தால் கம்பெனி திவாலாய் விடுமாம்." "என்னையா—என் மகனுக்கு என்னையா?" "உம் மகனா?" அவரைப் போல் அதிபால்யத்தில் நல்ல குணத்துடனும், பழக்கத்துடனும், அதிகப் படிப்புடனும் இருப்பவர்கள் எங்கேயாவது அதிக நாட்கள் ஜீவித்திருப்பார்களா? அவர்களுக்கெல்லாம் அல்பாயுசுதானே?" என்று சொல்லிக் கொண்டே ஒரே ஓட்டமாக வெளியே ஓடி விட்டார் கணபதி ஐயர்.

வருஷப் பிறப்பு

ஆர். நடேசன்

வருஷப் பிறப்பு போய் 2 மாதங்கள் ஆய்விட்ட பிறகு அதைப்பற்றிப் பேச வந்திருக்கிறேன். இருந்தாலும் பாதகமில்லை; கேளுங்கள்! "ஹலோ குட் மார்னிங்! ஐ விஷ் யூ எ ஹாபி நியூ இயர்" என்பதை அநேகமாய் ஆங்கிலம் படித்த எல்லோரும் வருஷத்திற்கொரு முறை பேசி வருவதை நாம் கேட்கிறோம்.

"வாங்க, உட்காருங்க, என்ன பால் பொங்கித்துங்களா.'. என்னும் வார்த்தைகளும் வருஷத்திற் கொருமுறை நம் காதில் விழுகின்றன.

இவைகள் முறையே ஆங்கில வருஷப் பிறப்பையும் பொங்கல் பண்டிகையையும் குறிக்கின்றன என்பது நான் சொல்லாமலே விளங்கும். உழவர் நிறைந்த நம் நாட்டினர் வருஷப் பிறப்பை விட புது நெல்குத்தி பொங்கியுண்ணும் பொங்கல் பண்டிகையையே சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். பள்ளி மாணவர்கள் ஜூலையில் தங்கள் வருஷப் பிறப்பைக் கொண்டாடுவது போல் இவர்கள் தைமாதப் பிறப்பைக் கொண்டாடுகின்றனர் போலும்! பொங்கல் கழிந்த மறு நாள் மாட்டுப் பொங்கலன்று எல்லாக் குடியானவர்களும் தங்கள் மாடு கன்றுகளைக் குளிப்பாட்டி மஞ்சள், குங்குமம் பூசி மாலை யிட்டு பூஜித்துக் களிப்பர். மாலையில் புது உடை தரித்து சிங்காரம் செய்த வண்டிகளில், வர்ணமிட்ட கொம்புகளும் ஜில் ஜில் என்றொலிக்கும் மணிகளும், கம்பளிக் கயிறும் கட்டி அலங்கரிக்கப் பட்ட மாடுகளைப் பூட்டி கிராமப் பிரதக்ஷணம் வருவதும் சில ஊர்களில் வழக்கம்,

சென்னையில் கன்றுக்குப் பால் விடாமல் கறக்கும், பால் காரனும் கூட தன் பசுவை அலங்கரித்து வாத்தியங்களுடன் அதை ஊர்வலம் செய்வதை நாம் காண்கிறோம். நாட்டுப் புறங்களில் வசிப்பவர்கள் மாட்டுப் பொங்கலன்று மாலை புதிய உடையுடுத்தி பெரியவர்களைக் கண்டு வணங்கி ஆசி பெறுவது வழக்கம். பண்ணை ஆட்கள் தங்கள் எஜமானரிடமிருந்து இனாம் பெறுவதும், சில வாத்திய கோஷ்டிகளுடனும், வேஷத்துடதும் ஆடிக் களிப்பதும் பார்பதற்கு நேர்த்தியாக இருக்கும்.

ஜனவரி தேதியன்று அநேகமாக எல்லா ஆபீசுகளும் மூடப் படுகின்றன. கிருஸ்மஸ் அண்டு நியூ இயர் கார்டுகள் வாங்கி தன் நண்பருக்கு அனுப்புவதில் சிலருக்கு விருப்பம் அதிகம். தந்தி மூலமாய்த் தங்கள் ஆசீர்வாதத்தை அனுப்புபவர் பலர். கேக்குகளும் சாக்லெட்களும் அன்று அதிகமாக விற்பனையாகும். புது வருஷம் சம்பளம் உயர்த்தப்படும் காலமாகையால் துரைகளின் தயவைப் பெற தங்கள் சுய மரியாதையையும், விலை உயர்ந்த மாலைகளையும், பழங்களையும், மயக்கம் தரும் பானங்களையும் வாங்கிக் கொண்டு போய் துரைகளை வீட்டில் கண்டு, தாம் கொண்டுவந்தவற்றை சமர்ப்பித்து ஆனந்திப்பவரும் பலர். சுயமரியாதையை இழக்க மனமின்றி, சம்பிரதாயத்தை உத்தேசித்து ஆபீஸ் திறந்த உடனே ஒரு எலுமிச்சம் பழத்துடன் சென்று துரைகளைக் காண்போரும் சிலர் உண்டு.

இவைகள் ஒரு புறம் இருக்கட்டும். ஜனவரி பிறந்ததும் சிலர் "என்ன சார் போன வருஷம் போல் டூ லேட் என்று சொல்லக் கூடாது என்றுதான் முன்னடியாகவே ஞாப

கப் படுத்தினேன். ஹீட் ஆனாலும் பாதகமில்லை. வந்த உடனே அவஸ்யம் ஒன்று தயவு பண்ணவேண்டும்'' என்பதற்கு சங்கோஜப் படுவதில்லை. எந்தக் கடைக்காரன் நல்ல கேலண்டர் போட்டிருக்கிறானோ அவனுக்கு சில நாள் வரையில் நல்ல வியாபாரம் நடக்கும். எல்லோரும் வேண்டிய சாமான்களை வாங்கினதும் பில் கொடுக்கும் போது 'என்ன இந்த வருஷம் கேலண்டர் என்ன போட்டிருக்கிறீர்கள்?' என்று கேட்க மறக்க மாட்டார்கள். சைனா கடைத் தெரு முழுதும் ஒரே கேலண்டர் மயமாய் இருக்கும். இலவசமாகக் கிடைக்காதவர்களுக்கு வேண்டிய கேலண்டர்கள் இங்கு விற்கப்படும்.

சென்னை வாசிகள் புது வருஷ சமயத்தில் நடக்கும் வேடிக்கைகளைக் காண மனைவி மக்களுடன் உல்லாசமாய் வெளியே புறப்படுவர். வீடு திரும்புகையில் அவர்கள் கையில் பெலூன்களும், விளம்பர நோட்டீசுகளும், சில இலவச சாம்பிள்களும், கேலண்டர்களும் நிறைந்திருக்கும். குறைந்தது ஒரு வாரம் வரையில் இரவு 9 மணிக்கு முன் புருஷர்கள் வீட்டுக்குத் திரும்ப மாட்டார்கள். ஒன்று பாட்டுக் கச்சேரி, இல்லையானால் பார்க் வேடிக்கை, அதுவும் தவறினால் மூர்மார்க்கெட், சைனாபஜார் ரோந்து இவைகளில் மாலைப் பொழுது போகும்.

ஆபீசுகள் திறந்த உடனே எல்லோருக்கும் வேலை அதிகமாக இருக்கும். போன வருஷக் கணக்குகளை சீக்கிரம் முடிக்க வேண்டிய நிமித்தம் அதிக நேரம் ஆபீசில் இருந்து வேலை செய்ய வேண்டியும் வரும். கம்பெனியில் அதிகலாபம் வந்திருப்பதாகத் தெரிந்தால் குமாஸ்தாக்கள் தங்களுக்கு சம்பளம் உயருமா என்று எதிர்பார்ப்பார்கள். கணக்கில் நஷ்டம் என்று தெரிந்தால் சிலருக்கு முதலாளிகளைவிட அதிக மனக் குழப்பம் உண்டாகும். ஏன் தெரியாதா? வியாபாரம் அதிகமில்லாத போது குமாஸ்தாக்களில் இரண்டொருவரை குறைக்கலாம் என்று எஜமானன் எண்ணி விடுவாரோ என்றுதான். இப்படி வருஷப் பிறப்பு சிலருக்கு சந்தோஷத்தையும், சிலருக்கு மனக் கவலையையும் உண்டு பண்ணுகிறது, இல்லையா?

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

35 வருடங்களாக உலகப் பிரசித்தி பெற்ற **ஸ்ரீ அம்பாள் நெ. 1. பட்டணம் பொடி**யை உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள். காரம், மணம், குணத்தில் நிகரற்றது. மாதம் ஒன்றானாலும் குணம் குறையாதது. எங்கும் கிடைக்கக் கூடியது.

ஸ்ரீ அம்பாள் & கோ.,
தபால் பெட்டி நெ. 3, மதராஸ்.

ஹோட்டலும் டாக்டரும்

"ஸத்யா"

லிங்கி செட்டித் தெருவில் வெகு நாளாக ஹோட்டல் இல்லாத குறை நிலவி வந்தது. இந்த இருபதாம் நூற்றாண்டில் பட்டணத்தில் ஒவ்வொரு தெருவிலும் மூலைக்கு மூலை இருபது ஹோட்டல்கள் காட்சி அளித்த போது அந்தத் தெருவில் மட்டும் ஒரு ஹோட்டலும் இல்லாதது அத்தெருவாசியான எனக்கு அதிசயமாகவே இருந்தது.

இந்தக் குறை நீடித்திருக்காமல் ஹோட்டலை ஏற்படுத்திய புண்ணியம் சேலம் கங்காதரய்யரைச் சேர்ந்ததாகும். இந்த விஷயம் அவர் கவனத்திற்குக் கொணடு வரப்பட்டதும், தட்சணமே அவர் ஹோட்டலை வைத்து விட்டு மற்ற காரியங்களைக் கவனித்தார்.

ஹோட்டலுக்குப் பக்கத்து வீடு யாரும் குடி வராமல் கவனிப்பாரற்றுக் கிடந்தது. எனக்குத் தெரிந்த வரையில் ஐந்து வருஷங்களாக வௌவால்கள், அவ்வீட்டை வாசஸ்தலமாகக் கொண்டிருந்தன.

ஹோட்டல் திறக்கப்பட்ட ஒரு வாரத்தில் அந்த வீட்டிற்கு யோக காலம் பிறந்தது. டாக்டர் சுந்திரத்தின் திருஷ்டியில் பட அவர் தமது ஜாகையையும் 'டிஸ்பென்ஸரி' யையும் அவ் வீட்டில் வைத்துக் கொண்டார்.

அவ் வீட்டுச் சொந்தக்காரர் ஹோட்டலை மனமார வாழ்த்தியிருப்பாரென்பதில் சந்தேக மில்லை.

வீட்டிற்குக் குடி வந்தது கூட அதிசயமாகப் படவில்லை. வந்த சுருக்கில் டாக்டருக்கும், ஹோட்டல் கங்காதரய்யருக்கு மிடையே நட்பு ஏற்பட்டதுதான் மகா அதிசயமாகும். ஒரு மாதப் பழக்கமேற்பட்டதில் அவர்கள் பத்து வருஷங்கள் பழகியவர்கள் போலாகி விட்டார்கள்.

ஹோட்டலில் வரும்படி வந்ததென்றே சொல்ல வேண்டும். இல்லையெனில் ஹோட்டலை வைத்துக் கொண்டிருக்கக் கங்காதரய்யருக்குப் பைத்தியமா என்ன?

கங்காதரய்யரும் டாக்டர் சுந்தரமும் ஒருவர்க் கொருவர் உயிராய் இருந்து வந்ததைப் பற்றி வெளியே பேசிக் கொள்ளப் பட்டது. ஹோட்டல் ஐயருக்குக் கிடைத்து வந்த ஊதியத்தைப் போல, இரட்டிப்பு லாபம் டாக்டருக்குக் கிடைத்து வந்தது பகிரங்க ரகசியம்.

இவர்கள் தங்களுக்குள் இவ்வளவு பாந்தவ்யம் கொண்டாடினதின் ரகசியம் ரொம்ப நாள் வரையில் எனக்குத் தெரிய வில்லை.

அந்த ஹோட்டலில் சாப்பிட்டதில்லை யென்ற குறை நீங்க, ஒரு நாள் போய் விட்டு வந்தேன். உபசாரங்கள் பலமாக நடந்தன. கங்காதரய்யர் தேனொழுகப் பேசினார்.

எனக்குச் சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த ஆசாமி பட்சணங்கள் ஒவ்வொன்றையும் கொண்டு வரும்படி கூறி ருசிபார்த்தான். சாப்பிட்டுப் பார்த்தான். மீண்டும் அதையே கொண்டு வாருங்கள் என்றான்.

ஆனால் எனக்குத் திருப்தி அளிக்க வில்லை. எல்லாமே அவ்வளவு உயர்தர மானது என்று சொல்வதற்கில்லை. திரும்பின பிறகு கொஞ்சம் லேகியம் சாப்பிட்டதும் சரியாகி விட்டது.

கோபாலையர்தான் எனக்குக் குட்டை வெளிப் படுத்தினர். இதைப் பற்றி அவரிடம் பிரஸ்தாபித்த போது "உங்களால் விஷயம் தெரிந்து கொள்ள முடிய வில்லையா?" என்றார்.

"தெரிந்து கொள்ள முடியவில்லை. அதனல்தான் உம்மைக் கேட்டது" என்றேன்.

"அப்படியானல் நீங்கள் போய் வந்ததில்லை போலிருக்கு."

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? போய் வராமல் என்ன?"

"நீங்கள் சொல்வது ஆச்சரியமாய் இருக்கிறதே. விஷயம் என்னவோ?"

"உங்களிடம் நான் இது வரை டாக்டரிடம் போக வேண்டிய அவசிய மேற்பட வில்லை யென்று சொல்லிப் பெருமை அடித்துக் கொண்டிருக்கிறேனல்லவா? இனிமேல் அப்படிப் பெருமையாகப் பேசிக் கொள்வதற்கில்லை. நான் டாக்டரைப் போய்ப் பார்த்து வந்து விட்டேன். டாக்டர் சுந்தரத்தைத் தான் போய்ப் பேட்டி கண்டேன். எனக்குப் புதிர் போடுகளா?"

"உண்மைதான். அந்த ஹோட்டலில் சாப்பிட்டதும் வயிற்று வலியைப் போக்கடிக்க ஒரு டாக்டர். அவசியம் தான்; அதனல் ரொம்ப தூரம் போக வேண்டிய சிரமமே இருக்காதல்லவா?" என்று கூறி விட்டுக் 'கட கட' வென்று சிரித்தார்

"அப்படியானல் நீங்கள்......"

"ஆமாம். எனக்கு இதில் அனுபவம் ஏற்பட்டதனல் தான் சொன்னேன்" என்றார்.

எனக்கு மட்டும் அந்த அனுபவம் ஏற்படாத காரணத்தை அப்பொழுது தான் தெரிந்து கொண்டேன். ஹோட்டலில் இருந்து வீட்டிற்குத் திரும்பினதும் லேகியம் சாப்பிட்டு விட்டது அப்பொழுது தான் ஞாபகம் வந்தது.

டாக்டரும் ஹோட்டல் கங்காதரய்யரும் உயிருக்குயிராக இருந்து வந்ததின் சூட்சுமம் விளங்கிற்றா?

அனுபவ ஜோதிஷர்

திறமைக்குப் பல தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்குப் பதில்கூற ரூ. 1/- மேற்கொண்டு கேள்விகளுக்கு அணா 8. மாதவாரியாக ஒரு வருஷத்திற்கு எதிர்கால பலன் கூற ரூ. 10/- ஒரு ஜாதகம் கணிப்பதற்கு ரூ. 2/- மிகவும் விவரமாக முழு வாழ்க்கைக்குப் பலன் கூற ரூ. 25/- ஜனன விவரம் அல்லது எழுதும் நேரத்தைக் குறிப்பிடுங்கள்.

"டபிள்யு பினான்", "சாபு" முதலிய புத்தகங்களின் ஆசிரியரான லெப்டினன் கர்னல் கிரஹாம் ஸெடன் ஹச்சிசன், டி. எஸ். ஓ., எம். ஸி., லண்டனிலிருந்து கூறுகிறார்:—"இவரது ஆருடங்களின் நேர்மை ஆச்சரியகரமாய் இருக்கிறது."

புரொபசர்
காழியூர் கோவிந்தாச்சாரி,
3/2, பிராடீஸ் ரோட்,
மைலாப்பூர், மதராஸ்.

மழைபோல் முடிந்தது

ரா. சேதுராமன்

மாலை சுமார் 5 மணி இருக்கும். நான் என் அறையில் உட்கார்ந்து கொண்டு அன்றைய தினசரிப் பத்திரிகையைப் படித்த வாறிருந்தேன். அப்போது போன வருஷம் எங்கள் ஊரில் நடந்த சம்பவத்தை நினைக்கும்படி நேர்ந்தது. பிறகு நான் என் நண்பன் ரங்கன் வந்ததைக் கூட கவனியாமல் ஏதோ சிந்தனை பண்ணிக் கொண்டிருந்தேன். அப்புறம் ஏதோ நினைவாக வாய் தவறி "இப்போது மட்டும் அவள் இருந்திருந்தால்" என்று கூறிவிட்டேன். என் நண்பன் அங்கு இருப்பதைப் பார்த்தபின் என் தப்பை உணர்ந்து பேச்சை மறைக்க அவனிடம் "எப்படா வந்தே, ஆத்திலே எல்லாரும் சௌக்கியமா?" என்று ஆரம்பித்தேன். என் நண்பன் ரங்கனோ எமகாதகப் பேர்வழி. நான் பேச்சை மறைப்பதைப் பார்த்து 'அதுசரிதான் 'அவள்' என்றாயே, அது யாரடா?" என்று கேட்டான். நான், "ஒன்றுமில்லை" என்று அவனை வேறு கவனத்தில் திருப்பப் பார்த்தேன். ஆனால் அவன் என்னைத் தொந்தரவு படுத்தவே அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். அவனும் 'உம்' கொட்டிக்கொண்டு கேட்க ஆரம்பித்தான்.

* * *

நான் கதையைத் தொடங்கினேன். இந்தச் சம்பவம் நடந்தபோது நான் பாபநாசத்தில் என் சித்தப்பாவோடு இருந்தேன். அந்த ஊரில் இரண்டே பள்ளிக்கூடங்கள் இருந்தன. ஒன்று முஸ்லிம் பள்ளிக்கூடம்; மற்றொன்று ஹிந்து பள்ளிக்கூடம். நான் பின் சொல்லப்பட்ட பள்ளிக்கூடத்தில் படித்துவந்தேன். நான் இருந்த பள்ளிக்கூடம் கலப்புப் பள்ளிக்கூடமாதலால் அதில் ஆண், பெண் இருவரும் படித்துக்கொண்டிருந்தார்கள். நான் அப்போது 6-வது பாரம் வாசித்துக் கொண்டிருந்தேன். அதே பள்ளிக்கூடத்தில்தான் நான் சொல்லப் போகும் அவளும் 4-வது பாரம் வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் பெயர் ஸரஸ்வதி. நான் அவளை ஸரஸூ என்றுதான் கூப்பிடுவது. அவள் என் வீட்டிற்கு எதிர் வீட்டில் இருந்தாள். அவள் தகப்பனார் பெயர் சீதாராமையர். அவரும் என் சித்தப்பாவும் இணை பிரியாத நண்பர்கள். அவர் சாப்பிடும் வேளை, தூங்கும் வேளை தவிர மற்ற வேளைகளில் எங்கள் வீட்டுத் திண்ணையிலேயே பழி கிடப்பார். அவர் எப்போதும் என் சித்தப்பாவோடு சீட்டாடிக் கொண்டிருப்பார் அல்லது வம்பளந்துகொண்டிருப்பார், நானும் அடிக்கடி சீதாராமையரோடு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருப்பேன். நான் கொஞ்சம் பாடுவேனாதலால் அவர் எப்போதாவது என்னைப் பாடும்படி சொல்வார். நான் அவருக்கு இஷ்டமான ஒரு பாட்டைப் பாடிவிட்டுப் பிறகு அங்கே நிற்கவே மாட்டேன். ஏனென்றால் அவர் திரும்பவும் இன்னொன்று பாடு என்று கழுத்தறுப்பார். எனக்கு எப்பொழுதும் தனியாக ஒருவரும் இல்லாத இடத்தில் பாடினால்தான் கூச்சமில்லாமல் தைரியமாகப் பாட வரும்; நாலு பேர் முன்னிலையில் பாடினால் பயத்தினால் பாட்டுத் தவறி விடும்.

ஒரு நாள் நான் காலையில் சாப்பிட்டு விட்டு ஆற்றங்கரைக்குப் போய் அங்கே இருக்கும் ஒரு பெரிய ஆல மரத்தின் நிழலில் உட்கார்ந்தேன். என்னை யறியாமல் பாடத் தொடங்கினேன். பாதி பாடிக் கொண்டிருக்கும் போது தூரத்தில் யாரோ வரும் சத்தம் கேட்டது. நான் பாட்டை நிறுத்திவிட்டுத் திரும் பிப் பார்த்தேன். ஸரஸு, இன் னும் சில பெண்களோடு ஆற்றங் கரைக்கு வந்துகொண்டிருந்தாள். நான் எப்பொழுதும் பெண்களி டம் வெகு ஜாக்கிரதையாய் இருப்பவனுதலால், அங்கு இருப்பது கூடாது என்று வீடு திரும்பி வந்து விட்டேன். நான் அவளைத் தாண்டி வந்தபோது, அவள் என்னைத் திரும் பிப் பார்த்த அந்தப் பார்வைதான் என்ன! அன்று முதல் என் மனம் என்னிடத்தில் இல்லை.

அந்த வருஷம் நடந்த மாதப் பரீ க்ஷையில் நான் எல்லாப் பாடங்களி லும் நிறைய மார்க் வாங்கிவிட்டேன். ஸரஸுவும் பாஸ் மார்க் வாங்கிவிட் டாள். ஆனுல் கணக்கில் மாத்திரம் அவள் மிகவும் குறைந்த மார்க் வாங் ஞள். நான் கணக்கில் புலியாதலால் அவள் தகப்பனுர் என்னை அவளுக்குக் கணக்கு வாத்தியாராக நியமித்து விட்டார். ஆதலால் நான் தினமும் அவள் வீட்டுக்குப் போகும்படி நேர்ந் தது. அப்படிப் போனதினுல் எனக்கு அவள்மேல் இருக்கும் காதல் அதிக மானதே தவிரக் குறையவில்லை. நான் அவளுக்குக் கணக்கு சொல்லிக் கொடுத்ததின் பயனுக அவள், பிறகு நடந்த பரீக்ஷையில் முதன்மையாகப் பாஸ் பண்ணினுள். இதனுல் அவள் தகப்பனுருக்கு என்மேல் அதிக அன்பு உண்டாயிற்று. அவள் இனிமேல் கணக்கு தானே போட்டுக் கொள் வாள் என்று எனக்குத் தெரிந்தது. அது முதற்கொண்டு நான் அவள் வீட்டுக்குக் கணக்கு சொல்லிக்கொடுப் பதற்குப் போவதில்லை. அதற்கு பதி லாக அவளே அடிக்கடி என் வீட் டிற்கு கணக்குப் போடுகிற பாவனை யாக என்னேடு பேசவருவாள். நானும் அவளும் கொஞ்ச நாழி பேசு வோம். எல்லாம் ஸ்கூல் விஷயத் தைப் பற்றித்தான். எனக்கு அவள் மேல் அடங்கா ப்ரேமை. எப்படியாவது அவளிடம் என் காத லைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஆசை மட்டுமே இருந்தது. ஆனுல் தைரியம் போதவில்லை. அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்தேன். கும்பிடப்போன தெய் வம் குறுக்கே வந்தாற்போல் அவளே ஒருநாள் என் கையில் ஒரு கசங்கின காகிதத்தைக் கொடுத்துவிட்டு மின்னல் போல் மறைந்தாள். பிறகு அதைப் பிரித்துப் பார்த்தபோது எனக்குண் டான ஆச்சரியத்திற்களவே யில்லை. அதில் அவள் என்னை ஆற்றங்கரைக்கு மாலை 5 மணிக்கு வரச் சொல்லி யிருந்தாள். நானும் போயிருந்தேன். நான் அவளை தைரியமாகக் கேட்டு விட்டேன். அதற்கு அவள் முதலில் வெட்கப்பட்டாளாயினும், பிறகு ஒப் புக்கொண்டாள். பிறகு கேட்பா னேன். அதுமுதற் கொண்டு நான் தினமும் அவளைக் காவேரிக் கரையில்

சந்திப்பேன். பிறகு அவளுடன் குஷாலாகக் காலத்தைப் போக்குவேன். இப்படியாக என் வாழ் நாள் கொஞ்சம் கழிந்தது.

கடைசியில் இந்த ஆனந்தத்திற்கும் முடிவு ஒருநாள் வந்தது. அந்த வருஷம் மழை பெய்யாததால் சீதாராமையருடைய நிலத்தில் விளைச்சல் இல்லை. அதோடு அவருக்குக் கடன் தொல்லை வேறு இருந்தது.

ஆதலால் அவர் பாபனாசத்தில் இருந்த அவருடைய நிலங்களை ரொக்கமாக விற்றுவிட்டு, அவருடைய கடன்களை அடைத்தார். பிறகு அவருக்கு அங்கே என்ன வேலை? அதுவும் இல்லாமல் அவருடைய மைத்துனன் வேறு, அவரை மதராஸுக்கு வரும்படி சொல்லி யிருந்தான். ஆதலால் அவர் தன் குடும்பத்தோடு மதராஸுக்குப் பயணமானார். எனக்கு இது மிகுந்த துக்கத்தை விளைவித்தது. ஸரஸுவைவிட்டுப் பிரிய நேருமே என்ற வருத்தந்தான். அவள் என்னைக் கடைசித்தரமாகச் சந்தித்து மிகுந்த வருத்தத்துடன் என்னிடம் விடைபெற்றுக் கொண்டாள். சீதாராமையரும் என்னிடம் விடை பெற்றுக் கொண்டார். பிறகு அவர்களைப்பற்றிய தகவலும் தெரியவில்லை. அவள் மதராஸுக்குப் போய் ஆறுமாதத்துக்கு அப்புறம் நானும் என் சித்தப்பாவும் மதராஸுக்கு வந்துவிட்டோம். இது வரையிலும் நான் அவளைப் பார்க்கவும் இல்லை; அவள் எங்கு இருக்கிறாள் என்றுகூட எனக்குத் தெரியாது, என்று என் கதையை முடித்தேன்.

அதைக் கேட்டுவிட்டு என் நண்பன் ரங்கன் என்னைப்பார்த்து, "ராமு, நீ கவலைப்படாதே. நான் எப்படியாவது அவள் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து அவளை உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன்" என்று கூறி என்னிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

ஒருநாள் அவன் என்னைச் சந்தித்து தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தான்.

அவன் வீட்டிற்குப் போனேன். என்ன ஆச்சர்யம் சீதாராமையர் அவன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அவர் என்னை மிக அன்புடன் அழைத்து உபசரித்தார். எனக்கு இதெல்லாம் ரொம்பவும் ஆச்சரியமாயிருந்தது. ஸரஸுவை வேறு, அங்கே பார்த்து விட்டேன். அவள் ஒரு நிமிஷம் எனக்குக் காக்ஷி யளித்துவிட்டு மின்னல்போல் மறைந்தாள். இதையெல்லாம் பார்த்துவிட்டு என்னால் பேசவே முடியவில்லை. சீதாராமையர் என் சித்தப்பாவைப்பற்றி விசாரித்தார். நான் சீதாராமையரோடு கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு என் விலாசத்தை அவருக்குத்தெரிவித்தபின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டேன். என்னுடன் பஸ் ஸ்டாண்டுவரை என் நண்பனும் வந்தான். நான் அவனிடம் இவருடைய வீட்டை எப்படிக் கண்டுபிடித்தாய், என்று கேட்டேன். அதற்கு அவன், "எப்படிக் கண்டுபிடித்தேனா, சீதாராமையர் என்னுடைய அத்திம்பேர். நான் தான் அவரை மதராஸுக்கு வரவேண்டு

மென்று சொன்னேன்" என்றான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் கண்களையே நான் நம்ப முடியவில்லை. இது கனவா, நனவா என்று கேட்டேன். ரங்கன் "எல்லாம் உண்மை தான், இப்போது சீதாராமையர் என் வீட்டில்தான் இருக்கிறார்" என்று சொன்னான். பிறகு நான் என் நண்பனிடம் விடைபெற்றுக்கொண்டு என் வீடுபோய்ச் சேர்ந்தேன். அங்கு என் சித்தப்பாவிடம் சீதாராமையரின் விலாஸத்தைக் கூறி அவர் இங்குதான் இருக்கிறார் என்றேன். உடனே அவர் மகிழ்ச்சி கொண்டு நாளை அவர் வீட்டுக்குப் போகணும், என்றார்.

ஆனால் தெய்வச் செயலாக சீதாராமையரே அதற்கடுத்த நாள் என் வீட்டிற்கு என் சித்தப்பாவைத் தேடிக் கொண்டு வந்துவிட்டார். என் சித்தப்பா அவரைப் பார்த்தவுடன் சந்தோஷமடைந்து அவரை வரவேற்று அன்புடன் உபசரித்தார். இருவரும் கொஞ்ச நாழி பேசின பிறகு சீதாராமையர் என் ஜாதகத்தைப்பற்றி விசாரித்தார். என் சித்தப்பாவுக்கும் விஷயம் புரிந்தது. அவர் என் ஜாதகத்தைக் கொடுத்தார். ஒப்பிட்டுப் பார்த்தபோது என் ஜாதகமும் ஸரஸுவின் ஜாதகமும் கடவுள் செயலால் பொருந்தியிருந்தது. அங்கு தயாராய்க் காத்துக் கொண்டிருந்த ராமபத்ர சாஸ்திரிகள் ஒரு முகூர்த்த நாளைச் சொன்னார். எங்கள் சம்பந்தத்தை ஆமோதிப்பது போல் சிவன் கோயில் மணி 'டண் டணார்,' என்று அடித்தது. நானும் 'மனம் போல் முடிந்தது' என்று நினைத்துக் கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தேன்.

ரூ. 1,550 இனாம்

சித்த வசீகர கவசம்:—ஆண், பெண் யாராயிருப்பினும், எவ்வளவு பிடிவாதமாயிருந்தாலும், நீங்கள் நினைத்த மாத்திரத்தில் வசீகரிக்கப்பட்டு, உங்களுக்கு அடங்கி நடப்பார்கள். விலை:—தங்க மூடியிட்டது ரூ. 6/8. வெள்ளி ரூ. 2/12. தாமிரம் ரூ. 1/15. (3-க்கு விலை ரூ. 5.)

லக்ஷ்மி கவசம்:—ஐச்வர்யம் வேண்டுபவர்கள் இதை அணியவேண்டும். கிருஹக் கோளாறுகளை வென்று வெற்றி அளிக்க வல்லது. மேலும், விரோதிகளை வெல்லும், பரீட்சை, வியாபாரம், உத்தியோகத்தில் வெற்றி அளிக்கும். சந்ததி வேண்டுபவர்கள் இரு கவசங்கள் அணியவேண்டும். ஆணுக்கு ஒன்றும், பெண்ணுக்கு ஒன்றும். விலை:-தாமிரம் ரூ. 1/15. (3-க்கு விலை. ரூ. 5.) வெள்ளி. ரூ. 2/12. தங்கம் ரூ. 6/8. தபால் செலவு தனி. ஆனால் ஒரே தரம் இரண்டு கவசங்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

குறிப்பு:—(1) இதற்கு உள்ளதாக உள்ள குணங்கள் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1550- இனாம். (2) குணமில்லாவிடில் பணம் வாபஸ். (3) இதை உபயோகிப்பதால் யாதொரு சிரமமும் ஏற்படாது.

Shri Swami Sat Narayan Jeotish Ashram, **(C.T.M.) Hoshiar Pur, N.W.R.**

மரண வாக்குமூலம்

"கார்த்திகை"

மீனாக்ஷி தப்பிப் பிறந்தவள் என்றே சொல்லவேண்டும். அவளிடம் குடி கொண்டிருந்த சாந்தம் அவளைத் தனியாக எடுத்துக் காட்டிற்று. அவள் முகத்தில் வழிந்தோடிய மலர்ச்சி புதுமையானது. அழகிலும் அவள் குறைந்தவளில்லை. 'மீனா இடுப்பில் குடத்துடன் குளத்துக்குப் போவதே தனியழகு' என்று பார்வதிப் பாட்டிகூட அடிக்கடி சொல்வாள். மீனாக்ஷி அழகிலும் குணத்திலும் நிகரற்று விளங்கினாள்.

சுந்தரபுரம் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் சுத்தப் பட்டிக்காடு. ரயிலும், பஸ்ஸும் போகாத இடம். பத்தரை மைல் கட்டை வண்டிப் பிரயாணத்தைச் சகிக்கத் தைரியமிருந்தால் சுந்தரபுரம் செல்லலாம். அங்கு நாலைந்து வேளாளர் வீடுகளும், மற்றும் இடையர் பாடி, குயவர் குடியும் உள்ளன. கிராமத்தின் கோடியில் உள்ளது தான் அந்தவூர் "காரை வீடு" பூர்வீகப் பெயர்! சர்க்கார் பட்டம் எழுதி அளிக்காமலே நிலைத்து விட்டது.

காரை வீட்டுப் பிள்ளைவாள் இரண்டு தரம் 'இன்ஸால்வெண்ட்' மனு போட்டாரென்றாலும் பரம்பரைக் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமலே வாழ்ந்து வந்தார். இப்பொழுது இருப்பதெல்லாம் அந்தப் பேர் (ந்து) போன காரை வீடும், நாலு சங்கிலி புஞ்சையும் தான். இதை வைத்துக் கொண்டு தன் மகனுக்கு ஐயாயிரம், பத்தாயிரத்தோடு பெண் வராதா என்று கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார். பிள்ளைவாளின் புத்திர பாக்கியம் சிவசைலம், மழைக்குக் கூட பள்ளிக் கூடத்தில் ஒதுங்கியவனல்ல. ஆனால் வாட்ட சாட்டமான ஆள். ஆறடி உயரம், அகன்ற மார்பு, படர்ந்த முகம். ஆனால் அந்த முகத்திலே சரசுவதியின் களை யில்லை. தாமரை யில்லாத தடாக மன்ன வெறிச் சென்றிருந்தது.

பிள்ளையவர்களின் பகீரதப் பிரயத்தனத்தில் மீனாவை மருமகளாகப் பெற்றார். மீனாவுக்கு சொந்த ஊர் திருநெல்வேலி. தாமிரவர்ணிக் கரையில் வளர்ந்தவள். நல்ல குடும்பத்தில் பிறந்தவள். அவளுடைய 'குறு குறு' வென்ற விழிகளில் அவள் புத்தி சாதுர்யம் தென்பட்டது. ஆனால் சிவசைலம் அவளுக்கேற்ற கணவனில்லை. இது மட்டும் உண்மை!

பாவம் மீனா என்ன செய்வாள்? பரம்பரைக் கௌரவத்திற்காகப் பகட்டுடன் வாழ்ந்த பிள்ளையின் கிரகம் அவளுக்கு காராக்ரஹமாயிருந்தது. வேளா வேளைக்கு சாப்பாடு உண்டா? காலா காலத்துக்கு உறக்கம் உண்டா? மெல்லிய அவள் மேனி துவண்டது. நாள் முழுதும் உழைத்து உழைத்து உருகினாள். இதற்கிடையில் பதி சேவை. அதையும் மறந்தவளல்ல. ஆனால் இதெல்லாம் சிவசைலத்தின் மனதில் ஒரு சிறு சலனத்தைக் கூட உண்டு பண்ண முடியவில்லை. அந்தோ! மீனாக்ஷியின் வாழ்க்கைச் சக்கரம் காடு முரடான பாதையில் செல்லலாயிற்று.

அன்று வீடு ஏக அமளி துமளிப்பட்டது. மாமியார் விஸ்வரூபம் எடுத்து

விட்டாள். அந்தக் கோரக் காட்சியைக் கண்டு மீனு ஒரு கணம் கண்களை மூடினுள். அடுத்த கணம் விழிகளைத் திறந்த போது எதிரே சிவசைலம் கண்களில் தீப்பொறியெழ அவளைப் பார்த்தான்.

— "சீ நாயே! உனக்கென்ன அவ்வளவு திமிரா! அம்மாவின் வார்த்தையைத் தட்ட" என்று உறுமினுன் இடி இடித்ததுபோல.

மீனு பேதை! 'திறு திறு' வென்று விழித்தாள். முரட்டுக் கணவனின் கோபம் வரம்பு கடந்தது. அவன் கையிலிருந்த குண்டாந்தடி, பாவம் மல்லிகை மலரொத்த அவள் சிரசைப் பலம் பார்த்தது. 'ஐயோ' என்று அலறிக் கொண்டு பூமியில் சாய்ந்தாள் மீனு. அவள் மண்டையிலிருந்து ரத்தம் 'களகள' வென்று ஒழுகியது.

தந்திகள் பறந்தன. மதராஸிலிருந்த அவள் அண்ணன் சுந்தரபுரம் வந்தான். அவன் நெஞ்சு துடித்தது. தன் தங்கையை நொந்தான். "இந்த முரடன் மெல்லிய மலரைக் கசக்கிவிட்டானே" என்று பொருமினுன். ஆனுலும் அவனுடைய வாலிப மனசு பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்தது.

மீனுவின் படுக்கை யருகில்—ஆம், அது தான் அவளுடைய கடைசி மரணப் படுக்கையாகவமிருந்தது—அவள் சகோதரன் உட்கார்ந்து கொண்டிருந்தான். இடையிடையே நீண்ட பெருமூச்சு. "அண்ணு அது மட்டும் வேண்டாம். அந்தப் பாவம் எனக்கு வேண்டாம்" என்று அவள் விசித்து விசித்துக் கூறினுள். உடன்பிறந்தானின் கண்களிலிருந்து நீர் 'பொல பொல' வென்று உதிர்ந்தது.

மீனு படுக்கையில் படுத்து ஐந்தாவது நாள் ஜன்னி கண்டுவிட்டது. அவள் என்னென்னெல்லாமோ பேத்தினுள். காலையில் வெளியே சென்ற சகோதரன் எங்கு சென்ருன் என்று தெரியவில்லை. மாலை நேரம். கிராமம் கூட அடங்கிவிட்டது. திடீரென மோட்டார் 'ஹாரன்' சப்தம் கேட்டது.

பிள்ளை வீட்டு முன்பு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து மீனுவின் 'அண்ணு' குதித்தான். "வாருங்கள், இப்பொழுதே மரண வாக்குமூலம் வாங்கி விடுங்கள். அவனைப் பழிக்குப் பழி வாங்கியே தீரவேண்டும்" என வெறி பிடித்தவன் போல் கூறினுன். அவன் பின்னுல் இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இறங்கினுர்கள்.

மீனு பிதற்றிக் கொண்டிருந்தாள். இன்ஸ்பெக்டர் கையில் பென்ஸிலைப் பிடித்த வண்ணம் எழுதுவதற்குத் தயாரா யிருந்தார். அவள் கண்கள் யாரையோ தேடுவன போல் சுழன்று கொண்டிருந்தன. "மீனு, சொல், சொல்லிவிடு, ஏன் மறைக்கிருய்?" என்று துடித்தான் சகோதரன். இன்ஸ்பெக்டர், "அம்மா, உங்கள் மண்டையில் ஏற்பட்டிருக்கும் காயத்திற்குக் காரணம் என்ன?" என்று வினவினுர்.

மீனு கேள்வியை அறிந்து கொண்டாள் போல் தெரிந்தது. அவள் பதில் சொல்ல முயற்சித்தாள்; ஆனுல் முடியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அவள் இதயத்தின் அடியிலிருந்து வார்த்தைகள் எழ ஆரம்பித்தன.

"இல்லை......என்னை யாரும் காயப்படுத்தவில்லை......நானே தவறி விழுந்தேன்" என்று சிரமத்துடன் கூறினுள். இன்ஸ்பெக்டர் குறித்துக் கொண்டார். "என்ன மீனு! உன் நெஞ்சு இறுகி ஏன் இப்படிக் கல்லாய்ப் போய்விட்டது" என்று கதறினுன், அண்ணன். இன்ஸ்பெக்டர் போய் விட்டார். அவள் மரண வாக்குமூலமும் அவருடன் பிரயாணம் செய்தது.

பயங்கரமான இருள் சூழ்ந்தது. மீனாவின் தலைமாட்டில் திருவிளக்கு பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. அணைவதின்முன் எரியுமே அதுபோல வீட்டின் மூலையில் ஒரு உருவம் அசைவற்று நின்று கொண்டிருந்தது. மீனாவின் விழிகள் சுழன்றன. "அவர் எங்கே?" என்று மெதுவாகக் கேட்டாள். சிவசைலம் வந்து அவளருகில் குந்தினான். அவனுடைய கரஸ்பரிசம் பட்டபொழுது அவள் முகத்தில் புதிய காந்தி வீசியது. மரணப் படுக்கையிலும் பதிபக்தி! சிவசைலம் பேச சக்தியற்றுக் கிடந்தான். திடீரென்று பலமான காற்று வந்தது. தீபம் அணைந்தது! பிள்ளைவாளின் 'காரை வீட்டி' லிருந்து அழுகைக் குரல் எழும்பிற்று!

*　　　*　　　*

இச்சம்பவம் நடந்து ரொம்ப காலமாயிற்று. எத்தனை வருடம் என்று சரியாக ஞாபகம் இல்லை. ஒரு நாள் நான் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். ஒரே கூட்டம் சிதம்பரம் ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு மூன்றாம் வகுப்பு வண்டிகள் தாங்க முடியாத சுமையைச் சுமந்து கொண்டு சென்றன. சிதம்பரம் கழிந்ததும் வண்டி காலியானது. நான் மேலே சென்று கொண்டிருந்தேன். யாரும் வண்டியில் இல்லை, என்னைத் தவிர. இதுவரை மடக்கியிருந்த காலை சற்று நீட்டினேன். ரயில் புறப்படக் கொஞ்ச நேரம் இருக்கும்போது ஒரு பரதேசி என் வண்டியில் ஏறினான். அவனுடைய தாடி வெளுத்திருந்தது. நடையில் தள்ளாடினான். அவன் கண்கள் என்னைச் சந்தித்ததும் திடுக்கிட்டுப் பின்னால் தள்ளிப் போனான். உரோம மடர்ந்த அவன் முகத்தில் ஒரு திகைப்பு தெரிந்தது. நான் உற்று நோக்கினேன். மின்ஸார விளக்கின் மங்கலான ஒளியில் அவன் முகத்தை நான் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஆனால் அவன் எதையோ மிதித்தவன் போல் துள்ளியது எனக்கு ஆச்சர்யத்தைத் தந்தது.

என் மனசில் திடீரென்று ஒன்று உதித்தது. "யார் நீ, சிவசைலமா?" என்றேன. "ஆம், அந்தப்பாவிதான்" என்று கூறிவிட்டு விரைவாக வண்டியை விட்டு இறங்கினான். ரயிலும் இரைந்துகொண்டு கிளம்பியது. அதன் பின் நான் சிவசைலத்தைக் காணவேயில்லை!

FRENCH RAISO CUPID CREAM

Powerful Sexual Cream

(External use for men)

It is extensively in use in European and Foreign countries. A few minutes after application enables rapid development of size of male organ and improves power of erection, never experienced before and gives abundant pleasure by long retentive power to old or young. It is quite favourite for rich men who keep many wives. Simple application strengthens weak nerves and restores lost vitality. It is also excellent treatment for partial impotency, too rapid ejaculation of deformity of the organ, curved, shrivelled condition, or shortness in size, weak erection owing to various causes, masturbation, prolonged abstinence or advanced age. Gives lasting pleasure and increases sexual desire.

Price per bottle Rs. 2-0-0.

T. R. ROYAL & Co.,

DIRECT IMPORTERS,

No. 3, Krishnappa Naick Tank Street,

SOWCARPET, :: MADRAS.

நகை எங்கே?

"சாந்தி"

லக்ஷ்மி தேவியை அறியாதவர்கள் ஒருவரு மிருக்கமாட்டார்கள். பெண் எழுத்தாளர்களின் கோஷ்டியில் அவளுக்கே முதல் ஸ்தானம் அளிக்கப் பட்டது. அவளது கட்டுரைகளும் நாவல்களும் பிரசுரிக்கப்படாத பத்தி ரிகைகள் அநேகமாகத் தமிழ் நாட்டில் கிடையாதென்றே சொல்லவேண்டும்; பொருளும் புகழும் ஒருங்கே அவளைத் தேடி அடைந்தன. "நேசன்" என்ற பத்திரிகையில் காரிகையின் கண்ணீர் என்ற தொடர் நாவல் வெளி வந்துகொண்டிருந்தது. அந்த நாவல் தமிழ் நாட்டிலேயே ஒரு பெரிய பரபரப்பை யுண்டு பண்ணிவிட்டது. நாவல் முடிவடையு முன்பே பல பாராட்டுக் கடிதங்கள் அவளைத்தேடி வந்தன. லக்ஷ்மி தேவி மிகுந்த செல் வாக்குடன் இராஜ போகத்தில் வாழ்ந்து வந்தாள். ஒரு ஞாயிற்றுக் கிழமை லக்ஷ்மி தேவி கவலை தோய்ந்த முகத்துடன் தன்னறையில் உட் கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்து ஒரு கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. அந்தக் கடிதத்தை வெறுப்புடன் படித்துப் பார்த்தாள். "ஆசிரியை லக்ஷ்மி தேவியம்மாளுக்கு-தயை செய்து உடனே, ஒரு ரஸமான கட்டுரை யெழுதி யனுப்பும்படி கேட் டுக் கொள்ளுகிறேன். ஐம்பது ரூபாய் சன்மான மளிக்கப்படும்" என்று எழுதப்பட்டிருந்தது. "ஐயோ! இந்த தர்ம சங்கடத்துக்கு நான் என்ன செய்வேன்? எவ்வளவு மண் டையை உடைத்துக் கொண்டாலும் எனக்கு எழுத வரமாட்டேன் என் கிறதே" என்று கையைப் பிசைந் தாள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு புகைப் படத்தின்மேல் அவளது திருஷ்டி பாய்ந்தது. லக்ஷிமி தேவி யின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவமொன்று அவள் மனக் கண்ணின் முன் வந்து நின் றது.

*　　　*　　　*

அப்போது அவளுக்கு வயது இருபதிருக்கும்; கணவனுடன் தனிக் குடித்தனம் செய்து கொண்டிருந்தாள். அவளது ஆருயிர் சிநேகிதி ரங்கநாயகி—ஒரு இளம் விதவை; நோய் வாய்ப்பட்டு இறக்கும் தருவாயிலிருந் தாள். அனாதையான அந்த மங்கை சாகு முன்பு தன் உயிர்த் தோழியைச் சந்திக்க விரும்பினாள். லக்ஷ்மி தேவிக் குத் தன் நிலைமையை விஸ்தரித்து ஒரு கடிதமெழுதினாள். லக்ஷ்மிதேவி ஓடோடியும் சென்று சிநேகிதியைப் பார்த்துக் கண்ணீர் வடித்தாள். "லக்ஷ்மி தேவி! இறக்குமுன்பு உன் னிடம் ஒரு வரம் கேட்க விரும்பு கிறேன். நீ என் உயிர்த் தோழியாக இருப்பது உண்மையாயின் என் கோரிக்கையைத் தவறாமல் பூர்த்தி செய்! இதோ இருக்கும் மரப் பெட்டியில் என் ஜீவிய சரித்திரம் முழுவதும் அடங்கி யிருக்கிறது. ஆம். ஐந்து வருஷங்களாக நான் அரும்பாடுபட்டு எழுதிய பத்து நாவல் களும் நூறு சிறு கதைகளும் இந்தப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. திடீரென்று என் மரணகாலம் நெருங்கிவிட்டபடியால் இவற்றை உன்னிடம் ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். இவைகளையெல்லாம்

நீ எப்படியாவது பிரசுரித்துவிடு. ஆனால் ஒன்றுமட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள். இந்தக் கதைகளின் மூலம் ஏராளமான பொருள் கிடைப்பதாக இருந்தால், அப்பொருளைத் தருமத்துக்கே செலவிடு. என்னைப்போன்ற இளம் ஏழை விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் உபயோகப்படும் விதத்தில் செலவழி! எனக்காக இந்த உதவியைமட்டும் செய்ய மறந்துவிடாதே'' என்று சொன்னாள் ரங்கநாயகி. லக்ஷ்மி தேவி ''அப்படியே ஆகட்டும்'' என்று சொன்ன பிறகே ரங்கநாயகி கண்ணை மூடினாள்.

எழுத்துப் பிரதிகள் நிறம்பிய பெட்டியுடன் ஊர்வந்து சேர்ந்தாள் லக்ஷ்மிதேவி. கதைகளை யெல்லாம் வாசித்தாள். ஒவ்வொரு கதையிலும் ஜீவரஸம் ததும்பிக்கொண்டிருந்தது. அவள் மனதில் பேராசை எழுந்தது. கதைகளையும் நாவல்களையும் பத்திரிகைகளுக் கனுப்பினாள். பத்திரிகைகளும் அக்கதைகளை அன்புடன் அங்கீகரித்தன. சன்மானங்களை வாங்கிப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொண்டாள், லக்ஷ்மிதேவி. வைர நகைகளாகச் செய்து போட்டுக் கொண்டாள். ஒரு தம்படிகூட தர்மத்துக்குச் செலவிடவில்லை. சிநேகிதியின் மரணகால வேண்டுகோளை அறவே மறந்தாள். பெட்டியிலிருந்த கதைகளெல்லாம் பிரசுரமாகிவிட்டன. கடைசி நாவல் **நேசன்** என்ற பத்திரிகையில் வெளி வந்து கொண்டிருந்தது. பத்திரிகாசிரியர் ஒரு சிறுகதை எழுதியனுப்பும்படி லக்ஷ்மிதேவியைக் கேட்டிருந்தார். என்ன செய்வாள் பாவம்! எவ்வளவு முயன்றும் அவளால் ஒரு வரிகூட எழுத முடியவில்லை. ''ஐயோ! ரங்கநாயகியின் நாவல்களை என் பெயருடன் வெளியிட்டதுடன் நில்லாமல் பொருளையு மல்லவா அபகரித்துக் கொண்டேன்! கதை எழுதத் தெரியவில்லை என்று சொன்னால் எல்லோரும் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?'' என்று எண்ணி எண்ணித் தவித்தாள்.

அன்றிரவு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு தத்தளித்துக் கொண்டிருந்தாள். நடுநிசி மணி பனிரண்டடித்தது. லக்ஷ்மிதேவி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டிருந்தாள். ஒரு மெல்லிய உருவம் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த அலமாரியைத் திறந்தது. ''என் கட்டுரைகள்—என் நாவல்கள்'' என்று முணுமுணுத்தது அவ்வுருவம். ரங்கநாயகியின் ஆவியே அவ்வுருவம் என்று நொடியில் அறிந்து கொண்டாள் லக்ஷ்மிதேவி. எழுந்திருக்க முயன்றாள்; அவளால் எழுந்திருக்க முடியவில்லை. வாய் திறந்து கூச்சலிடவும் முடியவில்லை. பயத்தால் அவளுக்குத் தொண்டை அடைத்துப் போய்விட்டது.

ரங்கநாயகியின் ஆவி அலமாரியைத் திறந்து புத்தகங்களை ஆத்திரத்துடன் புரட்டிப் புரட்டிப் பார்த்தது. ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே வீசியெறிந்தது. பிறகு லக்ஷ்மிதேவியண்டை வந்தது. அவள் கழுத்திலிருந்த வைரப்பதக்கத்தைக் கழற்றியது. ''ஐயோ! ரங்கநாயகி! என்னை மன்னித்துவிடு! மன்னித்துவிடு!'' என்று அலறிக் கொண்டு எழுந்தாள் லக்ஷ்மிதேவி.

''என்ன என்ன?'' என்று கேட்டுக் கொண்டே மின்சார விளக்கை யேற்றினான் லக்ஷ்மிதேவியின் கணவன். லக்ஷ்மிதேவியின் உடல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. வைரப்பதக்கமும் சங்கிலியும் காணப்படவில்லை.

''ஐயோ! ரங்கநாயகியின் பிசாசு வந்து என் நகைகளைக் கழற்றிக் கொண்டு போய்விட்டது'' என்றாள் லக்ஷ்மிதேவி. அவள் கணவன் வியப்

புடன் நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். அறைக் கதவு உட்புறத்தில் தாளிட்ட படியே இருந்தது. திருடன் வருவதற்கு வழியில்லை. லக்ஷ்மிதேவியின் கழுத்தி லணியப்பட் டிருந்த வைரப் பதக்கமும் சங்கிலியும் எங்கே? பிசாசு திருடுமா? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க யாராலாவது முடியுமா?

மறுநாள் நேசன் பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் பின் வருமாறு பிரசுரிக்கப் பட்டிருந்தது.

'நேற்றிரவு லக்ஷ்மிதேவி யென்னும் பெயர் போன கதாசிரியையின் வைரப் பதக்கத்தை எவனோ களவாடிச் சென்றுவிட்டான். அதனாலேற்பட்ட மன அதிர்ச்சியில் ஆசிரியைக்குச் சித்தம் கலங்கிவிட்டது. சுய ஞாபகமேயில்லாமல் சிரிப்பதும் அழுவதுமாக இருக்கிறாராம். அவர் சீக்கிரம் குணமடைந்து தமிழுலகுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று பகவானை மனமாரப் பிரார்த்திக்கிறோம்.'

லக்ஷ்மிதேவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்ற சங்கதி காட்டுத்தீ போல் எங்கும் பரவிவிட்டது. அவளது சித்தசுவாதீனமின்மைக்கு நகை போனதுதான் காரணம் என்று ஜனங்களெல்லாம் நம்பினாலும் உண்மையான காரணம் இறந்துபோன ரங்கநாயகிக்கும் லக்ஷ்மிதேவிக்கும் தெரியுமல்லவா? இருந்தாலும் லக்ஷ்மிதேவியின் நகைகள் போனது மர்மமாகத்தான் இருக்கிறது.

அழகிய கண்ணாடி க்ளாக்

(FANCY GLASS CLOCK)



வெள்ளை வெளேரென்ற சுவற்றில், பச்சைக் கண்ணாடி சிகப்பு எழுத்துக்களுடன் கூடிய இந்த கடிகாரத்தை மாட்டினால், பளிச்சென்று பிரகாசிப்பதோடு, சுவற்றிற்கு வெகு அலங்காரமா யிருக்கும். நல்ல சப்தமுடையது. நன்றாகவேலை செய்யக்கூடியது. 6'' x 6'' அளவுள்ளது.

விலை ரூ. 6/-

தபாற் செலவு பிரத்தியேகம்.

ORIENTAL FANCY STORES.

POST BOX No. 12204. CALUTTA. (S. E. . 153)

பலா பலன்

கூ. வெங்கடேசன்.

சேஷிப் பாட்டிக்கு ஒரு பிள்ளை உண்டு. அவர் பெயர் ராமச்சந்திர அய்யர். அவர் பேரில் பாட்டிக்கு உயிர். கொஞ்சநேரம் எங்கேயாவது சென்றுவிட்டால், "ராமு எங்கே? இன்னும் வரலையே? அவன் எங்கே போயிட்டான்?" என்று பாட்டி தவியாய்த் தவிப்பாள். பாட்டிக்கு, மடி, ஆசாரம் எல்லாம் உண்டு. அவள் வைகறையிலெழுந்து ஆற்றுக்குச் சென்று, ஸ்நானம் செய்துவிட்டு, கட்டுக் கட்டாய் விபூதியைப் பூசிக்கொண்டு சூரிய நமஸ்காரம் முதலியன செய்துவிட்டு வீடு திரும்புவாள். ஒரு ஹரிஜனனைப் பார்த்து விட்டால் போதும். நெருப்பை மிதித்தவள் போல், ஒரு துள்ளுத்துள்ளி கொஞ்சதூரம் போய், அவனை ஸஹஸ்ரநாம அர்ச்சனை பண்ண ஆரம்பித்து விடுவாள்.

ஒரு நாள் பாட்டி அப்பளம் இட்டுக் கொண்டிருந்தாள். மணி நான்கு இருக்கும். குப்புவும் கூட அப்பளம் இட்டுக் கொண்டிருந்தாள்.

ராமு அய்யர் வெளியே அவசரமாய்ப் போகவேண்டு மென்று துரிதப் படுத்திக் கொண்டிருந்தார். ஏன்? டிபன் ஆகவில்லை. ஐயருக்கு வந்த கோபத்திற்கு அளவே யில்லை.

"ஏண்டி, நான் அவசரமாகப் போகணுங்கறேன். சாவகாசமாக சமைச்சிண்டிருக்கயே. ஏதாவது சூடு சுரணை இருக்கா?" என்று தொண்டை வறண்டு போகும்படி கத்தினர்.

"அப்பப்பா, பார்த்தாலும் பார்த்தேன். உங்களைப்போல யாரு மிருக்கமாட்டா. நனைஞ்ச விறகை வாங்கிண்டு வந்து போட்டுட்டு அட்டகாசம் பண்றேளே. பொம்மனாட்டியாப் பிறந்தாலே இப்படித்தான் அவதிப் படணும். உலகத்திலே எல்லாம் இப்படித்தான் உங்களைப் போல குதிக்கறாளா? நன்னா யிருக்கு." என்று சொல்லிக் கொண்டு முகவாய் கட்டையின் மீது கையை வைத்துக் கொண்டு, கண்ணைக் கசக்கிக் கொண்டே அடுப் பண்டை போய் அடுப்பை ஊதத் தொடங்கினாள்.

"இதுவும் என் தலையெழுத்தா, நான் அவசரமாப் போகணுங்கறேன்; நான் தின்னுதே ஒழிஞ்சு போயட்டுமா?" என்று சொல்லிவிட்டு வெளியே போய் விட்டார்.

"என்ன அநியாயமிது? ஒரு புருஷன் வெளியே அவசரமாப் போகணும்னு சொல்றான். இப்பொதான் ஆடிண்டு அசைஞ்சுண்டு சமைக்கிறாளே. ஊம்! அவனைத்தான் சொல்லணும். எல்லாம் அவன் கொடுக்கிற இடந்தான். நம்ப சொல்லி ஏன் பொல்லாத பேர் எடுத்துக்கணும்" என்றாள் பாட்டி.

அப்போது தான் "தள தள" வென்று காப்பி கொதித்துக் கொண்டிருந்தது.

"டிங்—டிங்—டங்—" என்று மணி ஆறு அடித்தது. பாட்டி தன் வழக்கப்படி தவித்துக் கொண்டிருந்தாள். ஐயர் இன்னும் திரும்பவில்லை.

மணி 7–ம் ஆயிற்று. பறவைகளும் தங்கள் தங்கள் இருப்பிடங்களைச் சேர்ந்தன.

"மணி எட்டாயிற்றே, ராமு இன்னும் வரலேயே. ஐயோ! இப்படிக் கூட ஒரு மனுஷி உண்டோ? உனக்கு, இன்னும் புருஷன் வரவில்லேயே என்ற விசாரமே வேண்டாம். நீ நிம்மதியாயிரு. நானுவது போய்த் தேடிண்டு வரேன்" என்று பாட்டி முணுமுணுத்துக் கொண்டே அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்க் குப்பம்மாளேப் பார்த்துக் கூறிவிட்டு வெளியே தேடப் புறப்பட்டாள்.

குப்பம்மாள், பாட்டி வெளியே போனதும் கையை ஒரு நொடி நொடித்து விட்டு உள்ளே சென்ருள்.

எங்கும் இருள் மயம். பாட்டி மூக்கைச் சிந்திக் கொண்டே மெல்ல மெல்லத் தள்ளாடித் தள்ளாடிச் சென்று கொண்டிருந்தாள்.

"எண்டாப்பா! இதுக்கா இப்படிக் கோவிச்சுண்டு போறது! இப்பொ, அவளுக்கு என்னடா நஷ்டம். நீ தானே பசியோட அலேயறே; வா போகலாம்" என்று எதிரே வந்த ஒரு கறுப்பு உருவத்தைக் கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"அம்மா, அ...ம்...மா," என்றது அந்த உருவமும். அதற்கு மேல் அதனுல பேச முடியவில்லே. அது திமிறிற்று.

"எண்டாப்பா நான் சொல்றதைக் கேளு. வீணு அலேயாதே. 'அம்மா'ன்னு நீ கூப்பிடறபோது எனக்குத் துக்கம் துக்கமா வருதுடா. அவ கெட்டாடா. வா போகலாம்" என்று சொல்லிக் கொண்டே அவனே உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

"அம்மா, அம்...மா, என்னே விட்டுடுங்க; நான்......பற முனியனுங்க" என்ருன் வெட்டியான் முனியன்.

பாட்டிக்குத் தூக்கி வாரிப் போட்டது. சற்று அப்பால் சென்று தன் வழக்கப்படி, "எண்டா, நீ நாசமாப் போக. வாயைத் திறக்காமெ இருக்கயே. உன் வாய் என்ன அடைச்சா போச்சு? பீடை பேசாமே வாயை மூடிண்டு போய்த் தொலே" என்று சொல்லிவிட்டு வீடு திரும்பினுள்.

பார்த்தாள் பாட்டி. மணி 11-ம் ஆயிற்று. எங்கும் நிசப்தம். ஐப்பசி மாதமானதால் குளிரோ சொல்ல முடியவில்லே. அதற்கு மேல் குளித்தால் குளிர் ஆளேயே கொன்று விடும் போலிருந்தது. 'கப்—சிப்' என்று குளிக்காம லிருந்துவிட்டாள் பாட்டி.

"ஐயோ! எங்கே யெல்லாம் தேடிப் பார்த்தும் காணவில்லேயே! என் செய்வேன்? எங்கே போயிருப்பானே? தெரியவில்லேயே!" என்று சொல்லிக் கொண்டே பக்கத்தாத்து பங்கஜத்திணிடம் சென்ருள்.

"டி, அம்மா! எனக்குப் பசிக்கலே. என்னமோ போலெ இருக்கு. எனக்கு ஒன்றும் வேண்டாம். நீங்களெல்லாம் சாப்பிட்டுட்டுப் படுத்துக்குங்கோ, அப்புறம் வருகிறேன்" என்ருர் ராமு ஐயர்.

"சார், உங்க துருப்பு என்ன?—டயமனு, இஸ்பேட்டா?" என்று சொல்லிக் கொண்டே ராமு அய்யர் தன் கையிலிருந்த சீட்டுத் தாள்களே விரிக்கத் தொடங்கினுர்.

பாட்டியோ விடவில்லே. "எண்டா ஒரு பிடியாவது சாப்பிட்டுட்டு வந்து ஆடேண்டா. இதுக்குதான் அவசரமாய்ப் போகணும்னுயோ? ரொம்ப நன்ருயிருக்கு" என்ருள் பாட்டி.

"என்னே இப்பொ நிர்ப்பந்தம் பண்ணுதே. பிடிக்கலேன்னு சும்மா போயேன். உன் கூடப் பேசிண்டிருக்கிறதா, ஆட்டம் ஆடுகிறதா? எனக்கு ஒண்ணும் வேண்டாம், போ" என்று சற்று கோபத்தோடு பதிலுரைத்து விட்டு ஆட்ட ஸ்வாரஸ்யத்திலிருந்துவிட்டார்.

பாட்டிக்கு அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. பிறகு கோபத்துடன் வீட்டிற்குத் திரும்பினாள். குப்பம்மாள் அப்போது ஒரு நாவலை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். பாட்டியின் கோபத்திற்கு அளவேயில்லை.

"நீயும், உன் ஆம்படையானும் எக்கேடு கெட்டாவது போங்கள்!" என்று சொல்லிக் கொண்டே படுக்கையைப் போட்டுப் படுத்துத் தூங்கி விட்டாள் பாட்டி.

சீட்டுக் கச்சேரி மும்மரமாக இருந்தது. "என்ன! ஆட்டம்னா இப்படின்னா இருக்கணும்! ஆட்ட ஸ்வாரஸ்யத்திலே பசிக்கூட எடுக்கலேன்னா! என் ஸார், என்ன சொல்றேள்?" என்று ராமு ஐயர் சர்மா குருக்களைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம், சார். நீங்கள் சொல்றது ரொம்ப சரின்னா" என்று சர்மா குருக்கள் சொல்ல, பட்டு சாஸ்திரி கிட்டு சாஸ்திரி எல்லோரும் ஆமோதித்தனர்.

மணி 12 அடித்தது. அப்போது தான் எல்லோருக்கும் சுய நினைவு வந்தது. ஆட்டத்தை ஒருவாறு முடித்து விட்டு எல்லோரும் அவரவர் இல்லத்தை அடைந்தனர்.

ஐயரும் வீட்டிற்கு வந்தார். 'குப்பூ குப்பூ' என்று கத்தினார். யாரும் கதவைத் திறக்கவில்லை. பாட்டியும் குப்பம்மாளும் ஆழ்ந்த நித்திரையில் அயர்ந்திருந்தனர். ஐயர் பார்த்தார்! குளிரோ தாங்க முடியவில்லை. அதற்கு மேல் அவரால் கத்தவும் முடியவில்லை. பிறகு அவர் தம் மேல் துணியைத் திண்ணை மீது விரித்துவிட்டு, பசியோடு படுத்துக் கொண்டு, "சீட்டாட்டத்தின் பலாபலன் இதுதானோ" என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

9—5—'38-ல் சென்னை ஜோர்திஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், டீமகவி, சுகர்புஜண்டர், சாஸ்திர நிபுணர். ஜாதகம் கணிக்க ரூ-2. ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம், மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், ஒவ்வொரு காரியம் சித்திபெறும் ராசியில் சந்திரனின் நாட்களும் தினசரி கால அளவும், மற்றும் பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ-3. ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 3. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

புரபஸர் N. V. சுப்பிரமணியம், J. M., & J A

நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத், P.O. S. I. Ry. (சென்னை)

மாஜி மனைவி

"ஜல்ஸா"

அவனுடைய கண்கள் கலங்கித்தானிருந்தன. அவன் மனமும் துடிக்கத்தான் செய்தது.

"உன் மனம் கொஞ்சமாவது கஷ்டப்படுமானால் சொல்லிவிடு. இதை நான் மறுத்து விடுகிறேன்........."

கனகம் பதில் சொல்லவில்லை. உலர்ந்த நாக்கை ஒரு தடவை உள்ளே இழுத்து, தன் பவள இதழ்களை மெதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

"உனக்கு இஷ்டமில்லையேல்...... ஏன், வருகிறவளுக்கு உன் வேலைக்காரியின் ஸ்தானம் தான். வேண்டுமானால்..........."

!! அவன் நகாஸ் வேலையில் ஆரம்பித்தான். அவள் நிலை எவ்வளவு தான் சோகம் நிறைந்ததாக இருந்தபோதிலும், அவனுக்கு இஷ்டமில்லாமலா இந்தவார்த்தைகள்?

ஹும்! பாழும் உலகில் எல்லாம் ஏமாற்றந்தானு? கட்டிய கணவன் கூட நீர்க்குமிழியா? அவள் நாயகன் அவள் மீது அள்ளமுடியாதபடி கொட்டியிருந்த உள்ளங்கூடக் கானலா?

"என்ன கனகா?..........."

தன் அவசரத்தில் அவனுக்கு ஆத்திரம் வேறு!

அவள் இரக்கஞ்சிந்த அவனை ஒரு முறை ஆராய்ந்தாள். ஒரு தேய்ந்த புன்னகை அவள் வாயை இலேசாகக் கோணலாக்கிற்று.

"இல்லை.....ஆமாம்.....ஏன்.....?"

பேசுவது அறியாமலேயே அவள் உளறினள்.

"..................?"

"என்ன என்னைக் கேட்கின்றீர்களே? நான் யார் குறுக்கே நிற்க? ...."

"என்ன இப்படிச் சொல்லுகிருயே?"

"நீங்கள் என் மீது கொண்டிருக்கும் பிரேமைக்கு............"

"அப்படியாயின் இஷ்டந்தானு?"

அவள் பதிலே சொல்லவில்லை. அவள் கயல் விழிகளின் கொஞ்சும் பார்வையையே அவன் பதிலாகக் கொண்டான்.

"சரி, வரட்டுமா?"

ஊரார் அறியக் கைதொட்டுத் தாலி கட்டிய கணவன் சந்துரு வெளியே ஓடினன்.

2

மனமுடைந்து கனகம் துவண்டு விழுந்தாள். அவள் வாழ்க்கை ஏடுகள் புரண்டுவந்து அவள் பாவத்தைக் கொட்டிக் கொண்டன.

* * *

முதன் முதலில் அவளை மயங்கச் செய்தவன் சந்துருதான்.........ஆம், அன்றுதான்! அவர்கள் வந்தார்கள் இன்பலஹரியாக.

கொஞ்சம் தகராறுக்குப் பிறகு, இஷ்டத்துடன் தான் அவள் நாணிக் கோணி அவர்கள் முன்வந்தாள். சந்துருவின் முகத்தில் கனகத்தின் எழில் பிழம்பைக் கண்டதும் எல்லையற்ற பிரகாசம் ஒளிர்ந்தது. அவன் திருப்தியடையாமல் மறுபடியும்

திரும்பினான். திருட்டுத்தனம்! அவள் பார்வையின் சுழலில் அவன் சிக்கினான்; இப்பொழுது அவளுடைய அழகும், அவள் ஆசையும்—அப்ப!

இன்பக் கனவுகள்!

சில நாட்களுக்குப் பிறகு அவன் உலகத்தின் எதிரில் சத்தியம் செய்தான்.........ஹூம் அவ்வளவும் பொய்! அவ்வளவும் புரட்டு!! என்றாலும் அவள் அவன் மனைவியானாள்.

*　　*　　*

பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். ஆம், வம்பு அளக்க இந்த ஜனங்களுக்குச் சொல்லித்தரவா வேண்டும்?

கனகத்தின் விஷயத்தில் விதியும் தன் சதியில் ஆரம்பித்தது. இல்லாவிட்டால் குழந்தைப் பிராயத்தோடே போய்விட்டது என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த அந்தப் பயங்கரமான வியாதி—இருமல்—திரும்பிக் கொள்ளுமா? — அதுவும் நாலாவது மாதத்தில் தலையில் கோரமான எழுத்து உறுத்திக்கொண்டிருக்கும் பொழுது.........ஆம் வாய் ஓயாத இருமல், சளி.

நாட்கள் ஆக ஆக வியாதியும் அதிகமாயிற்று. புக்ககத்தில் குடும்பம் பெரிது. வைத்துக் கொண்டு வைத்தியம் செய்ய முடியவில்லை. பிறந்த வீட்டிற்கு அவள் வந்து சேர்ந்தாள்.

முதலில் சந்துருவினிடமிருந்து அநேக கடிதங்கள், அவளிடம் ஆசையை வாரி இறைத்து வந்து குவிந்தன. ஆனால் வர வர.......... சகஜந்தானே.........மாதத்திற்கு ஒரு கடிதம் வருவதும் அரிதாகிவிட்டது.

*　　*　　*

அவள் எவ்வளவு தரம் கூப்பிட்டுப் பார்த்தும் அவன் திரும்பிய பாட்டைக் காணவில்லை. கடைசியில் அவளாகத்தான் அங்கு திரும்பி வந்தாள்—ஆனால், முற்றின காசத்தோடு!

அதற்காக?

ஒன்றுமில்லை. வராதிருந்தால் நல்லதாக இருந்திருக்கும் கண்ணுக்கெதிரில் தன் காது கேட்கும்படி புதிது புதிதான யோசனைகள்.

முதலில் சந்துரு இதற்கு ஒத்துக் கொள்ளாதவனைப் போலப் பாவனை செய்தான்.

ஆனால் தாயாரின் இந்த அங்கலாய்ப்பு?—“அழகுதான்; யாரில்லை என்று சொன்னது? அதற்காக இந்த ரோக பிண்டத்தைக் கட்டிக் கொண்டு யாரால் மாரடிக்க முடியும்?”

கனகம் இதைக் கேட்டாள். அவள் இருதயத்தின் அடியில் ஒரு ஜில்லிப்பு—தாங்கமுடியாத குளிர்—தலைசுற்றல்

“ஆமாம்......” என்ற அவள் கணவனின் குரலே அவள் காதில் ரீங்காரம் செய்தது.

“இனிமேல் என்ன செய்ய முடியும்?”—இது ஒரு புதுக்குரல்

அதற்கும் சந்துருவின் குரலே பதிலளித்தது.

“என், விஜயா இல்லையா?......”

அவள் தன்னையும் மீறி ‘ஹோ!’ என்று கதறிவிட்டாள். ஒரு இருமல் அதைத் தொடர்ந்து இழுத்தது.

கனகம் நினைத்தாள்—“யாரது? விஜயாளா? .....என் சத்துருவாகவா? சக்களத்தியாகவா?”

இதுவே அவள் நிலையை இன்னும் உலுக்கிவிட்டது.

*　　*　　*

இதற்குப் பிறகுதான் சந்துருவே நேராக கனகத்தினிடம் தன் மனதை வெளிப்படுத்தி விட்டான்.

3

முகூர்த்த நாள் நெருங்கி ஓடி வந்தது. பல இடங்களுக்கும் பத்திரிகைகள்; சாமான் ஜாப்தா; டான்ஸ், கேளிக்கைகள்—பல ஏற்பாடுகள்.

கனகத்தின் மனதின் பாரமே அவளை வெகு உக்கிரமாக அழுத்த அவள் நிலை கேவலமாகிக் கொண்டே வந்தது. இருமல் அவளுக்கு அதிகமாகிவிட்டது. தனியாக மாடியின் தெற்குக் கோடி அறையில் அவள் படுத்துக்கொண்டிருந்தாள்.

அவளைப்பற்றி ஒருவரும் நினைத்துப் பார்க்காவிட்டாலும், கலியாணத்தன்று ஒன்றும் அசம்பாவிதமாக நடக்காமலிருக்க வேண்டுமே என்றுதான் எல்லோருக்கும் திகில்—சந்துருவுக்கு உள்பட!

4

'டம் டம்' மென்று வாத்தியக்காரர்கள் தங்களுடைய திறமையையும் வலிமையையும் பரிபூர்ணமாகக் காட்ட சந்துரு விஜயாவின் கழுத்தில் மாங்கல்யத்தைக் கட்டினான்; முடிச்சையும் வெகு அழுத்தமாகப் போட்டான். அவன் முகத்தில் களங்கமிருந்ததாகவும் தெரியவில்லை!

நாள் முழுவதும் வெகு தடபுடல்: வரவேற்பு, சாப்பாடு, மகிழ்ச்சியின் சின்னங்கள் எல்லாம் ரொம்ப ஜாஸ்தி.

கடைசியில் ஆசீர்வாதத்திற்காக எல்லோருக்கும் அந்தப் புது மணமகனும் மணமகளும் நமஸ்கரித்தார்கள்.

"நாங்களும்......இல்லை நானும் ஒரு காலத்தில் இப்படித்தான் செய்தேன்—என்னையும் எல்லோரும் ஆசீர்வாதம் செய்தார்கள்..........."

கனகாவின் உடைந்த உள்ளத்திலிருந்து உருண்டு சிதறின சிந்தனை அலைகள்!

கடைசியில் அவள்—விஜயா—கனகத்திடம் வந்தாள்; 'அக்கா'விற்கு நமஸ்காரம் செய்தாள்.

கனகத்திற்கு திடீரென்று இருமல் வந்துவிட்டது. ஒரு கால் மணி நேரம் ஓயாமல் இருமினாள். எல்லோரும் கொஞ்சம் ஒதுங்கி நின்றார்கள்.

"அம்மா! நீதானா விஜயாள்?...... நீயாவது சௌக்கியமாக இரு........"

இந்த வார்த்தைகள் எப்படியோ இருமலுக்கு நடுவே தத்தளித்து வந்தன.

உடனே எல்லோரும் அப்பால்போக அடி எடுத்து வைத்தனர். விட்டால் போதுமென்று நின்று கொண்டிருந்தார்களோ என்னவோ?

தன் கணவன் தன்னை ஒரு முறையேனும் திரும்பிப் பார்க்கமாட்டானா என்று கனகம் ஏங்கி சந்துருவைப் பார்த்தவாறே படுக்கையில் கிடந்தாள்.

சந்துரு அவளைப் பார்க்கவேயில்லை. மௌனமாக மாடிப்படியில் இறங்க ஆரம்பித்தான்.

கீழே எல்லோருடைய இன்பக் குரலும் பின்னிப் படர்ந்து கொண்டிருந்தன. சிறிது நேரம் வரையில் வாய் ஓயாமல் அலறிய அவளுடைய இருமல் அவர்களுக்குக் கேட்டாலல்லவோ, அவள் சாந்தியடைந்து விட்டது, அவர்களுக்குத் தெரியப் போகின்றதா?

கனகம் செத்துப் போனால்தானென்ன? அவள் மாஜி மனைவிதானே!

படுக்கை அறையின் அழகிய லீலா விநோத
போட்டோ படங்கள்.
(FRENCH LADIES TAKEN FROM REAL-LIVES OF BOTH SEXES)
இருவரும் ஆனந்த மய்மாக பிரமிக்கச் செய்யும், பல தேசத்தின் யுவதிகளின் லீலா விநோதப் போட்டோ படங்கள்.
(Printed in Bromide Paper)
No. 1. செட்டு 1-க்கு 12 படங்கள். விலை ரூ. 3—8—0
No. 2. செட்டு 1-க்கு 12 படங்கள். விலை ரூ. 2—8—0
வி. பி. சார்ஜ் அணு 8. அன்னிய நாடுகளுக்கு முன்பணம் அனுப்புக
எமது விலாசம்:—
எம். ஜி. ராஜன் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி நெ. 231, ஜி. பி. ஓ.
சென்னை. (C. H.)

பொ. அ. போ. 83-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 83
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

பொ. அ. போ. 84-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 84
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

பொ. அ. போ. 85-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்.

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 85
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

தேவை !

கீழ்க்கண்ட இடங்களில் டிபாஸிட்கட்டக்கூடிய
நம்பிக்கையும், பொறுப்பும் வாய்ந்த

ஏஜண்டுகள் தேவை!

அம்மாப்பேட்டை
உத்தமபாளையம்
கம்பம்
சின்னமனூர்
சங்கரநயினார்கோயில்
கல்லிடைக்குறிச்சி
துறையூர்
திருக்காட்டுப்பள்ளி
திருத்துறைப்பூண்டி
வலங்கைமான்
முத்துப்பேட்டை
விருத்தாசலம்

ஏஜன்ஸி தேவையுள்ளோர்
நிபந்தனைகளுக்கும், மாதிரிப் பிரதிகளுக்கும்
எழுதவும்.

சர்க்குலேஷன் மானேஜர்,
"சந்திரோதயம்"
60, தம்பு செட்டி தெரு, சென்னை.

"காமதேனு"

மாத மிருமுறைத் தமிழ்ப் பத்திரிகை

இனிய கதைகள், வர்த்தமானங்கள், சினிமாச் செய்திகள்,
போட்டிப் பரிசுகள் நிரம்பியது.

தனிப் பிரதி விலை அணா அரை.

வருஷ சந்தா

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 2—0—0.

மாதிரிப் பிரதி இனாமாக அனுப்பப் பெறும்.

எல்லா ஊர்களுக்கும் டெபாஸிட் கட்டக்கூடிய
ஏஜண்டுகள் தேவை.

மானேஜர் :
"காமதேனு" காரியாலயம்
287, தம்பு செட்டி தெரு : : சென்னை.

போனஸ் போட்டி 4

சந்திரோதயம்

"பொது அறிவு"ப் போட்டி—83

முடிவு தேதி 13—3—1941

பிரவேசக் கட்டணம் ஒரு கூபனுக்கு அணு 4.

ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில் சென்னை,

ஸென்ட்ரல் பாங்கியில் டேபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகள் கண்டு பிடிக்க வேண்டிய விதம்:

வெள்ளைக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும் எண்களைப் பாருங்கள்! ஒவ்வொன்றிலிருந்தும் இடமிருந்து வலமாகவோ, அல்லது மேலிருந்து கீழாகவோ வார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. ஒரு எண்ணிலிருந்து ஆரம்பிக்கும் வார்த்தை எப்பக்கமாகச் செல்லுகிறதோ அப்பக்கத்திலுள்ள கறுப்புக் கட்டத்தின் முன் அது முடிவடையும். ஒவ்வொரு வெள்ளைக் கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்துத்தான் எழுதலாம்.

உதாரணமாக:—முதற் குறிப்பு, (இடமிருந்து வலமுள்ளது) மழை பெய்தால் வீதிகளில் இது வுண்டாகிவிடும் என்றிருக்கிறது. சகதி சரியான விடை. இவ்விதமே மற்ற விடைகளையும் கண்டு பிடிக்கவேண்டும்.

மேலிருந்து கீழ் குறிப்பைப் பாருங்கள்— சகவாசி என்ற விடை சரியாக அமைகிறது.

'பொது அறிவு'ப் போட்டி—83

1 ச	க	2 தி	■	3 க	4	5 தீ	6	ம்	■
க	■	7	8 ரி	■	9 கா		லா	■	10
வா	■	11 ச		12 தி		ம்	■	13	லை
14 சி	15 த		ப		ம்	■	16 ஆ		■
■		■	17	ணை	■	18		■	19
20 சு.		21 கி		■	22 த		■	23	ரு
24	கு		■	25 சா		ப		■	
கு	■	26 மூ	27		■		■	■	■
■	28		கு	போனஸ் போட்டி No. 4					29
30 சை		கு	■	■	■	31	க்		ரி

முடிவு தேதி 13—3—1941

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 83-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப்படுத்துவ தென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ.........

'பொது அறிவு'ப் போட்டி—83

1 ச	க	2 தி	■	3 க	4	5 தீ	6	ம்	■
க	■	7	8 ரி	■	9 கா		லா	■	10
வா	■	11 ச		12 தி		ம்	■	13	லை
14 சி	15 த		ப		ம்	■	16 ஆ		■
■		■	17	ணை	■	18		■	19
20 சு		21 கி		■	22 த		■	23	டு
24	கு		■	25 சா		ப		■	
கு	■	26 மூ	27		■		■	■	■
■	28		கு	போனஸ் போட்டி No. 4					29
30 சை		கு	■	■	■	31	க்		ரி

முடிவு தேதி 13—3—1941

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 83-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ................

போட்டி நிபந்தனைகள்

(1) ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணு 4. பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். ஒரு ரூபாய்க்குக் குறைந்த கூபன்கள் அனுப்புவோர் பிரவேசக்கட்டணத்தை தபால் தலைகளாக வும் அனுப்பலாம். சந்தாத் தொகை முதலிய வேறு எதுவும் இந்த மணியார்ட ருடன் சேர்த்து அனுப்பக்கூடாது. அந்தந்தப் போட்டிக்குத் தனித்தனி மணி யார்டராக அனுப்ப வேண்டுமே யல்லாது ஒரே மணியார்டரில் ஒரு போட் டிக்கு மேற்பட்ட போட்டிகளுக்கு பிரவேசக் கட்டணத் தொகைகள் அனுப்பக்கூடாது.

உள்ளூர் வாசிகள் போட்டி முடிவு தேதியன்று மாலை 6-மணிக்குள் நமதாபீசிலுள்ள கவுண்டரில் கூபன்களைக் கவரில் அடக்கம் செய்து, கூபன் எண்ணிக்கையும் விலாசமும் மேல்கவரில் எழுதி பிரவேசக் கட்டணத்துடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒருவர் எத்தனை கூபன்களேனும் ஒரே கவரில் அனுப்பலாம் ஆனால், ஒவ்வொரு கூபனுக்கும் பிரவேசக் கட்டணம் அணு நான்கு செலுத்து வதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதும் சேர்த்து விடையுடன் அனுப்பவேண்டும்.

மணியார்டர் ரசீது இல்லாமல் வரும் கூடான்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா தென்பதை நேயர்கள் நன்கு கவனிக்க வேண்டும். மணியார்டர் கூபனிலும் விடையனுப்பும் கவர்மேலும் போட்டியின் நம்பரையும், அனுப்பப்படும் கூபன்களின் மொத்த நம்பரையும் எழுதவேண்டும். விடை கூபனிலும் மணியார்டர் கூபனிலும் விடை அனுப்பு பவரின் பெயரும், முழு விலாசமும் தெளிவாக எழுதவேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கூபன்கள் அனுப்புகிறவர்கள் கூபன்களில் வரி சைக் கிரமமாக நம்பர் போடவேண்டும்.

(4) விடைக் கூபன்களை மையினால் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். பென்சிலால் எழுதப்பட்ட கூபன்களும், கிழிந்த கூபன்களும், அடித்தல், திருத்தல்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

(5) விடைகள் முடிவு தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டுமை முடிவு தேதிக்குப் பிறகும், அல்லது முடிவு தேதியில் குறிப்பிட்ட நேரத்திம் குப் பிறகும் வந்து சேரும் விடைகள் கவனிக்கப்படமாட்டாது.

(6) போட்டி ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதற் பரிசும், அடுத்தபடி சரியாயிருக்கும் விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும் முறையே மூன்றுவது பரிசும் அளிக் கப்படும். ஒன்றுக்குமேல் சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை பகிர்ந் தளிக்கப்படும். எவருமே சரியான விடை அனுப்பாவிட்டால் கூடு மானவரையில் சரியான விடை அனுப்புபவருக்கு முதற்பரிசும், மற்றப் பரிசுகள் இதே முறையிலும் அளிக்கப்படும். ஒவ்வொரு தவறுள்ள வார்த் தையும் ஒரு பிழையாகக் கருதப்படும்.

ஏதாவது ஒன்று அல்லது பல கட்டங்களை எழுதாமல் விட்டுவிட்டால் பூராக்கூபனும் நிராகரிக்கப்படும். பரிசளிக்கும் விஷயத்தில் போட்டி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. இந்தப் போட்டியில் முதற்பரிசு பெறுபவருக்கு மற்றப் பரிசும் பெற உரிமையுண்டு. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட முதற் பரிசும் பெறலாம்.

(7) போட்டியின் தீர்ப்பு சம்பந்தமாக யாதொரு விதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

(8) சந்திரோதயம் காரியாலயத்திலும், அதனோடு சம்பந்தப்பட்ட பிற காரியாலயத்திலும் உள்ளவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(9) கூபன்கள் தபாலிலோ மற்றெவ்விதமாகவோ தவறிவிட்டால் அதற்குப் போட்டி ஆசிரியர் எவ்விதத்திலும் ஜவாப்தாரியாகமாட்டார். ஒருவர் பணம் அனுப்பி யிருக்கலாம். ஆயினும் அவர் அனுப்பிய கூபன் எமக்கு வந்து சேராமல் வழியில் தவறியிருப்பின் அதற்காக நாம் ஜவாப்தாரியாக மாட்டோம். போட்டி சம்பந்தமாக அனுப்பப்படும் தொகை எக்காரணங் கொண்டும் திருப்பி யனுப்பப்படமாட்டாது.

(10) இப்போட்டியில் அளிக்கப்படும் பரிசுத் தொகையை வேறு கணக்கிற்கு மாற்றுவதோ அல்லது வேறு போட்டிக்குக் கட்டணமாக ஈடு செய்வதோ முடியாது.

(11) போட்டிக்காக ஒருவரனுப்பும் கூபன்களின் எண்ணிக்கைக்கு அவர்களனுப்பும் பிரவேசக் கட்டணத் தொகை தகுந்த ருஜுவாகக் கருதப்படமாட்டாது. இப்போட்டி சம்பந்தமாகப் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதும் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்துவதுமாகும். இந்த நிபந்தனைகளுக் குட்பட்டுத்தான் நேயர்கள் சந்திரோதயம் போட்டிகளில் பிரவேசிக்கவேண்டும்.

(12) ஒரு போட்டி சம்பந்தமாய்ச் செய்யப்படும் உரிமைகள் (Claim) ஷை போட்டி முடிந்த தேதியிலிருந்து இருபது நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும். பிறகு செய்யப்படும் உரிமைகளோ அல்லது முடிவு சம்பந்தமான விபரமறிய வேண்டிய வேண்டுகோள்களோ கவனிக்கப்படமாட்டா. இருபது நாட்களுக்குப் பிறகு அப்போட்டி சம்பந்தமானவைகள் யாவும் அழித்து விடப்படும்.

(13) மேலே கண்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக உள்ள எந்தக் கூபனும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

போட்டியில் உபயோகித்துள்ள வார்த்தைகள் ஆனந்த விகடன் சித்திரப் போட்டி அகராதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

'பொது அறிவு'ப் போட்டி—83

1 ச	க	2 தி	■	3 க	4	5 தீ	6	ம்	■
க	■	7	8 ரி	■	9 கா		லா	■	10
வா	■	11 ச		12 தி		ம்	■	13	லே
14 சி	15 த		ப		ம்	■	16 ஆ		■
■		■	17	ணே	■	18		■	19
20 சு		21 கி		■	22 த		■	23	டு
24	கு		■	25 சா		ப		■	
கு	■	26 ழு	27		■		■	■	■
■	28		கு	போனஸ்போட்டி No.4	■	■	■	■	29
30 சை		கு	■	■	■	31	க்		ரி

முடிவு தேதி 13—3—1941

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 83-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவதென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப் பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ............

'பொது அறிவு'ப் போட்டி—83

1 ச	க	2 தி	■	3 க	4	5 தீ	6	ம்	■
க	■	7	8 ரி	■	9 கா		லா	■	10
வா	■	11 ச		12 தி		ம்	■	13	லை
14 சி	15 த		ப		ம்	■	16 ஆ		■
■		■	17	ணை	■	18		■	19
20 சு		21 கி		■	22 த		■	23	டு
24	கு		■	25 சா		ப		■	
கு	■	26 மூ	27		■		■	■	■
■	28		கு	போனஸ் போட்டி No.4					29
30 சை		கு	■	■	■	31	க்		ரி

முடிவு தேதி 13—3—1941

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 83-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள் கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ..................

'பொது அறிவு'ப்போட்டி-83குறிப்புகள்

இடமிருந்து வலம்

1 மழை பெய்தால் வீதிகளில் இது வுண்டாகிவிடும்.

3 ஒரு வகைக் கோவில் விளக்கு.

7 குடியானவர்கள் இந்தச் சுமை தாங்க முடியாமல் தவிக்கின்றனர்.

9 சரீரத்தின் அதிகக் கொதிப்பினல் உண்டாகும் நோய்.

11 இக் காலத்தில் இதைக் கண் காணிப்பவர் ரொம்ப அருமை.

13 திருமணம் நடைபெறும் போது மணமகன், பெண்ணின் கழுத்தில் இதை யணிவான்.

14 "………போகாம விருப்பேனே?" என்ருர் நந்தனுர்.

16 மலையின்மீது கூட இது அலக்ஷியமாய் ஏறும்.

17 சாதி.

18 சில ஆடவர்கள்………யால் படாத பாடு படுத்தப்படுகிருர்கள்.

20 இந்தத் தசை சரியாக இருந்து அடித்தால், யோகத்திற்கு எல்லேயேது?

22 தப்பு முழுவது மில்லே.

23 மோட்டார் வேகமாகப் போய்க்கொண்டிருக்கும்போது, இது எதிர்ப்பட்டால், டிரைவர் பாடு திண்டாட்டந்தான்.

24 புரட்டாசி மாஸத்தில் வரும் பௌர்ணமிக்கு இந்தப் பெயருண்டு.

25 சைவர்களால் நெற்றியில் அணியப்படுவது.

26 சிவன், பிர்மா, விஷ்ணு ஆகியவர்களின் பெயர்.

28 சில சமயங்களில் உளறிக் கொட்டும்.

30 ஏழைகள் வசிக்கும் வீடு திரும்பி யிருக்கிறது.

31 இவனிடம் உஷாராகப் பழக வேண்டும்.

மேலிருந்து கீழ்

1 உயிர்த் துணேவன்.

2 மாஸத்திற்கு இது முப்பது உண்டு.

4 சிலருக்குப் பிறரிடம் இது கேட்கப் பிடிக்காது.

5 இப்படியான பதார்த்தம் வட நாட்டினரால் பெரிதும் விரும்பிப் புசிக்கப்படுகிறது.

6 ஒருவகை மரம்.

8 பரத்திரி (வேசி) மறைந்திருக்கிருள்.

10 பெரிய குடும்பத்துப் பெண்களுக்கு இது நிறைய விருக்கும்.

12 இக் காலத்திய வீடுகளில் இது அனேகமா யிருப்பதில்லே.

13 "…தின்னும் புலேயா! உனக்கு மார்கழித் திருநாளோ?" என்ருர் நந்தனுரைப் பார்த்து வேதியர்.

15 எப்போதும் இத்துடன் பேசுதல் விரும்பத் தக்கதன்று.

16 மழைத் துளி.

18 பெருங்காற்று வீசும்போது இதிலுள்ளவர்கள் தவிப்பது இயற்கை.

19 இப்படியான மாமியாரிடம் அகப்பட்டுக்கொண்ட மருமகள் பாடு கஷ்டந்தான்.

20 இவன் ஒரு இராமாயண பாத்திரம்.

21 கிளி மூக்கைப் போன்றது.

22 உடற்பயிற்சி செய்வோர்… அடக்குவது உண்டு.

25 ஆரஞ்சுப் பழத்தின் இது உடம்பிற்கு நன்மை தரும்.

27 கடைசியில் ஒரு தி மட்டும் இருந்தால் வகுப்பாகும்.

28 பட்டிக்காட்டான் ஒருவன் நகரத்தில் வந்து அடிபட்டுக்கிடந்தால், அவனேப் பார்க்கும் போலீஸ்காரன் அவனுடைய இதைத் தொட்டுப் பார்ப்பான்.

29 கிராமவாசிகள் அதிகாலேயில் இதில் ஸ்நானம் செய்வது உண்டு.

'பொது அறிவு'ப் போட்டி—83



முடிவு தேதி 13—3—1941

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 83-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும் சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள் கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ...............

'பொது அறிவு'ப் போட்டி 79—முடிவு

மூன்ருவது பரிசு ரூ. 2500

இரண்டு தப்புள்ள விடை யனுப்பிய கீழ்க் கண்ட 636 பேர் கட்கும் மூன்ருவது பரிசுத் தொகை ரூ. 2500—ம் சமமாகப் பங்கிடப்பட்டுத் தலைக்கு ரூ. 3—15—0 வீதம் பரிசளிக்கப் பட்டிருக்கிறது.

சென்னை :—1-2 எம். நாகராஜன், ஜி. டி. 3-4 என். சிவானந்தம், ஜி. டி. 5-7 வி. கண்ணபிரான், சௌகார்பேட்டை. 8-9 எஸ். எம். ஐயங்கார், எழும்பூர். 10-12 பி. ஜே. சரஸ்வதியம்மாள், ஜி. டி. 13-14 ஆர். கனகாம்பாள், மயிலை. 15 கே. சாரங்கபாணி, ராயபுரம். 16-17 டி. பி. சுந்தரவரதன், ராயப்பேட்டை. 18-20 ஆர். எம், வெங்கட்ராமகனபாடிகள், மயிலை. 21-22 மு. கந்தசாமி செட்டியார், திருவல்லிக்கேணி. 23-24 வி. கெங்காதர நாயுடு, சென்னை. 25-27 கே. சுப்ரமண்ய சர்மா, தியாகராயநகர். 28-29 அலமேலு, ராயபுரம். 30-31 பி. வி. சீதாராமய்யர், ராயப்பேட்டை. 32-34 எஸ். என். தியாகராஜன், மாம்பலம். 35-36 வி. ராஜகோபால சாஸ்திரி. வேப்பேரி. 37 அம்புஜம், வேப்பேரி. 38-39 வி. ராமச்சந்திரன், ராயப்பேட்டை. 40-41 எல். தண்டபாணி முதலியார், கொத்தவால்சாவடி. 42. பி. எஸ். சாமிநாதன், கதீட்ரல். 43-44 மெ. சீதாராமன், மவுண்ட்ரோடு. 45 டி. சுந்தரமூர்த்தி, புரசை. 46-47 ஆர். பலராம், திருவல்லிக்கேணி. 48 ரஞ்சிதத்தம்மாள், மயிலை. 49-50 எம். பட்டம்மாள், குயப்பேட்டை. 51 ம. நாராயணய்யங்கார், மேலமாம்பலம். 52-53 பி. ஜெயராம், ஆழ்வார்ப்பேட்டை. 54 எஸ். ராகவாச்சாரி, தி. நகர். 55-56 டி. வி. வெங்கடேச சர்மா, ராயப்பேட்டை. 57 பி. மாரியப்பபிள்ளை, நுங்கம்பாக்கம். 58-59 கே. ராமநாதன். சிந்தாதிரிப்பேட்டை. 60-61 டி. ஆர். வேணு நாயக்கர், சூளை. 62 ராஜம்பாள், கொண்டித்தோப்பு. 63 வி. என். வீராச்சாமி, வண்ணாரப்பேட்டை. 64-65 ப. முருகேச பத்தர், ராயப்பேட்டை. 66 டி. எ. சடகோபாச்சாரி, எழும்பூர் 67-68 எம். ராஜவேலு, யானைகெவுனி. 69-70 ஆர். வெங்கட்ராமன் செட்டியார், சௌகார்பேட்டை. 71 சுப்புலெக்ஷிமி, சௌகார்பேட்டை. 72-73 எஸ். சத்தியநாராயணன், மயிலை. 74 ஆர். கே. சிவபுண்ணியம், பெரியமெட். 75 கே. டகவதீஸ்வரன், சேப்பாக்கம். 76-77 டி. ராமபத்ர அய்யங்கார், கோமளீஸ்வரன்பேட்டை. 78 எஸ். வேலாயுதம், சென்னை. 79-81 என். பழனிச்சாமி, பரசவாக்கம். 82-83 பொ. கோவிந்தராவ், வண்ணாரப்பேட்டை. 84-85 கே. தங்கவேல் பத்தர், ராயபுரம். 86-87 பி. அண்ணமலை முதலியார், பழைய வண்ணாரப்பேட்டை. 88-89 ஜே. இமானுவேல், மவுண்டுரோடு. 90-91 ஆர். செல்லமுத்து, வேப்பேரி. 92-93 சுந்தராம்பாள், சேத்துப்பட்டு. 94-95 எ. மீனாக்ஷிசுந்தரம், கொண்டித்தோப்பு. 96-97 ஆர். சோமசுந்தரம், தி. நகர். 98-99 என். எம். கிருஷ்ணமூர்த்தி, சௌகார்பேட்டை. 100 கே. எஸ். ராமசாமி ஐயர், மயிலை. 101-102 ஆர். லெட்சுமிகாந்தம், திருவல்லிக்கேணி. 103 எம். விஜயராகவன், ராயப்பேட்டை. 104-105 ஆர். பி. விஸ்வநாதன், பிராட்வே. 106-107 டி.

ரொக்கப்பரிசு
ரூபாய் 7,500

முதற் பரிசு	ரூ. 4,000
இரண்டாவது பரிசு	ரூ. 2,000
மூன்ருவது பரிசு	ரூ. 1,500

சந்திரோதயம்
"பொது அறிவு"ப் போட்டி—84

முடிவு தேதி 27—3—1941

பிரவேசக் கட்டணம் ஒரு கூபனுக்கு அணு 4.

ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில் சென்னை,

ஸென்ட்ரல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகள் கண்டு பிடிக்க வேண்டிய விதம்:

